உ
சிவாயநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும் திருவருள் பூண்டது.

இதழ் - 1 | பிங்களவருஷம் புரட்டாதிமாதம் 21-ம் திகதி வெள்ளிக்கிழமை [ 7-10-1977 ] | சுடர் - 2

# புலியூரானை சிவனை பேசாதநாள் பிறவாதநாள்

## தில்லைச் சிதம்பரத்தை மீள ஒருக்கால் திருநாவுக்கரசு சுவாமிகள் அடைந்து திருக்கூத்தைத் தரிசித்துப் பாடிய திருப்பதிகம் இவையாகும்

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

எவர்க்குமே நினைத்தற்கும் அடைதற்கும் மிக அரியவனை, அறம் நின்ற அந்தணர்தம் சிந்தை யாயவனை, அரியவேதத்தின் உட்பொருளாயவனை, அணுவாயவனை, யார்க்குமே கண்டுதெரிய முடியாத தத்துவனை தேன் போலத்தித்திப்பவனை பால்போல இனிய சுவையானை விளங்கும் ஒளியானவனை தேவர் கட்கு அரசை மற்று விஷ்ணுபெருமானுயவனை பிரமனுயவனை நெருப்பை காற்றை கனைக்கடலாய நீரை பெருமலையானவனை இவையாவும் தான் ஒருவனுகக் கலந்து நின்ற பெரியவனைப் பெரும் பற்றப் புலியூரில் அமர்ந்த பெருமானைப் பற்றி நாம் பேசாத நாள் எல்லாம் நாம் பிறவாத நாள் ஓர் பிறப்பு எடுத்தோ மானுல் அவன் பெருமை பேசாத நாள் பிறவாத நாள் என்றபடி இதுபேசும் பெருமை உணர்த்தியவாறு. 1

கற்றானைக் கங்கைவார் சடையான் தன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றொருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

யாவற்றையும் கற்றவனை கங்கை ஆறுவிளங்கிடும் சடையானை காவிரியாறு சூழும் திருவலஞ்சுழிக் கோயிலில் அமர்ந்திட விரும்பியவனை எல்லாப்பாசங்களை நீக்கினுர்க்கும்; சார்பு ஒன்றுஇன்றி அமந்தார்க்கும் அருள்செய்பவனை திருவாரூரிலும் புகுந்தருளுவானை நாம் அறிந்தோமல்லவோ! அவன் தான் மற்று ஆரும் தனக்கு ஒப்பில்லாதவனை தேவர்கள் எப்பொழுதும் வணங்கிப்போற்றப் பெற்றானை பெரும் பற்றப் புலியூரில் இருப்பவனைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாட்கள். 2

கருமானின் உரியதளே உடயைா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தாள் அமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கரிய புலியின் தோலை உடையாக அணிந்து; ஒலித்திடும் சிலம்புகள் கலந்து திருப்பாதத்து ஒலிப்ப நெருப்பைக்கையில் ஏந்தி;மிகச் சிறந்து வரும் தோள்கள் அசைந்து ஆடவளரும் பிறை சடையில் அணிந்து மான்பார்வை போலும் அருமையின் ஒளியுடைய முகத்தவளாம் அம்மை உடன் நின்றுகாண தேவர்கணம் தலைசாய்தது வணங்கிட ஆடுகின்ற பெருமானைப் பெரும்பற்றப்புலி யூரானை பேசாத நாள்எல்லாம் பிறவாத நாள். 3

[தொடர்ச்சி 2—ம் பக்கம் பார்க்க]

## மாதோர்பாகர் மலர்த்தாள் மறவாத ஓதுகாதல் உறைப்பு

[ இவை பெரியபுராணத்து உரைநிறைவின் ஆசிரியர் முகவுரை ]

சீ ஏதும் இல்லாது எனது செய்பணிகள் கொண்டருளும் தாயான கற்பகத்தின் பூங்கழல் போற்றி என் வாழ்வில் உற்ற பெரும் பேற்றினுல் பெரியபுராணத்து ஐந்தாவது பகுதியும் அச்சிட்டு வெளியாக்குவதுடன் பெரிய புராணம் முழுமையும் உரையுடன் அச்சிட்டு வெளியாகின்றது. எமது இப்பதிப்பில் நாயன்மாரது தமிழ் மறையும் அங்கங்கு சேர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் 5வது பகுதியில் எம்பெருமான் சுந்தரரது திருப்பதிகங்கள் தரப்பட்டுள்ளன.

கந்தபுராணம் ஆறுகாண்டங்களையும் உரையுடன் அச்சிட்டு வெளியாக்கியபின்னர் பெரிய புராணத்திற்கும் ஓர் உரை எழுதி அதனை இலங்கையில் அச்சிட்டு அதனுடன் தேவாரப்பதிகங்களையும் சேர்த்துப்பதிப்பித்து வெளியாக்கி எமது இலங்கை மக்கள் வாசித்து இன்புற வேண்டும்; எமது நாயன்மாரது தேவாரப் பதிகங்களில் உள்ள கருத்துக்களை நன்குசேர உணர்ந்து நல்நெறிப்படலாம் என்ற எண்ணத்தால் இந்த ஒரு பணியைப் புரிந்துள்ளேன். எனது எண்ணத்தில் இன்றைய மக்கள் நிலையில் எமது நாயன்மாரது கொள்கையும் சிவதொண்டின் மாண்பும் பெரிதும் யாவர்க்கும் தெரியப்படாதே உள்ளது என்பது தெளிவாகிற்று. இன்றைய இருபதாம் நூற்றுண்டில் மக்கள் மனதில் வேரூன்றிப் பரவுகின்றது சினிமாக்கலையே. ஏதேனும் ஒரு நன்மை எக்காலமுமே தராத இந்த சினிமாக்கலையை பெருக்கும் நோக்கமாக; வளர்க்கும் நோக்கமாக; பனுவல்களும் இலக்கியமும் செய்துளர் இக்காலத்து அறிஞர் எனப்படுபவர். ஏன் உலகத்து மகான்கள் பற்றற்ற சந்நியாசிகள் என்பவரும் கூட இப்பொழுது சினிமாவில் நடிக்கிறுர்கள்; நடிக்க முயன்று கொள்கிறுர்கள்; தமக்கு நடிப்பதற்கு ஓர் வாய்ப்புக் கொடுத்திடும் படி அத்துறையில் உள்ளவர்களை இரகசியமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள் என்பது வெளிப்படத் தெரிகிறது. சினிமாக்கலை பொய்மையைப் பெருக்க வாய்ப்பளிக்குமே ஒழிய ஒருபோதும் உண்மையை உணர வாய்ப்புத் தராது! அது உண்மை உணர்ந்த பல பெரியோர்கள் துணிபாகும்; இதுபற்றியே மூதாதையரும் ''கூத்துப்பார்க்க விரும்பாதே,, என்றும் ''கூத்தாடுவதும் பின்புற அங்கம் நெளிப்பதும் ஆத்தாதவன் செயல்'' எனவும் கூறினர். இந்த வாக்கியங்களின் உண்மையைப் பாருங்கள். கூத்துப் பார்க்க விரும்பாதே என்றபோது நீகூத்தைப் பார்ப்பது கூடாது என்றளவில் விட்டுவிடவில்லை. அந்தவிருப்பத்தையே கொள்ளாதே என்ற போது, அது உலகிற்கு எத்துணை தீங்கானது என்பதை நீங்கள் உணர்ந்து தெளிந்து கொள்ளுங்கள். அடுத்து அச் செயல் புரிவோரை ஆத்தாதவன் செயல்! என்கின்றபோது இந்த உலகில் பெறுதற்கரிய பிறவியைப் பெற்று ஒன்றில் தனக்கோ அல்லது பிறர்க்கோ ஏதும் ஒரு பிரயோசனமான செயலைச் செய்திட முடியாதவனுடைய செயல்தான் நடிகனது தொழில் என்பதாகின்றது. ஒரு சினிமாவில் அல்லது கூத்தில் ஒரு பெண் கற்புக்கரசியாக நடிக்கிறுர். அவளதுபேச்சில் நடிப்பில் நீங்கள் மயங்குகின்றீர்களே ஒழிய அவளது உண்மைக் கொள்கையை விளங்க முடியுமா? அல்லது உண்மையான கற்பு நெறியைக் கடைப்பிடித்திடும் எந்த ஒரு பெண்ணும் மேடையில் ஏறுவாளா! மேடையில் எல்லாம் எத்தனையோ நடிகர்கள் நாவலர் பாவலர் முழக்கி மேடை அதிர பெரும் கரகோசத்திடையே பேசுவார். அவரது பேச்சு அப்போது வசீகரம். கூத்தில் சண்டைகள் நடக்கின்றது; அற்புதமாக வீரனுகத் திகழ்ந்து வாய்ப்பேச்சின் வசனங்களால் கூசாது பேசிப் போரிடுகின்றுன்! அந்த நடிகன் உண்மையில் ஓர்யுத்த களத்தில் நெஞ்சில் உரத்துடன் போரிடுவானு? போர் ஒன்று வந்தால் அவன் நிலை எப்படி? சிந்தித்துப் பாருங்கள்; உண்மை கற்பனையில் ஒருபோதும் உருப்படுவதில்லை. உண்மையில்தான் உண்மை வெளிப்படும். பல கற்பனைக் கதைகளை எத்தனையோ எழுத்தாளர் சிருட்டித்துக் கதை எழுதுகிறுர். இந்தக் கற்பனையில் உண்மை இருக்கிறதா? இல்லை. ஆகவே கற்பனைக்கதைகளை நாம் ஓர் உண்மையான புண்ணியம் நிறைந்த ஓர் கதையாக ஏற்றிட முடியாது. அந்தக் கதைகளை வாசித்தல்கேட்டல் இவையாவும் எம்பிறவியில் செலவு செய்யும் வீணான நேரங்களாகும். இதை மக்கள் தமது சிந்தனையில் கொள்வதில்லை. கொள்ள முயன்றுலும் அதில் சலிப்பு ஏற்படுகிறது. இந்தவகை கற்பனைக் கதைகள் கூடாதுஎன்றுகூறிடும் பொழுது கேட்க வேதனையாகவும் இருக்கும்.

எமது வாழ்க்கையில் உண்மை தருமம் அன்பு எமக்குநன்மை தரும் தவத்தின் வேராவன; இவை இலேசாகப் பெற்றுக்கொள்ள முடியாத பொருள். எத்துணைச்

[தொடர்ச்சி 2—ம் பக்கம் பார்க்க ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலியூரானை சிவனை .......

*[ 1–ம் பக்கத் தொடர்ச்சி ]*

அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைகள் எட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

அரியதபோதனர் தொழுது பேற்றிடும் அப்பன் தன்னை; தேவர்களது முதல்வனை சிவனை மூப்படையாது விளங்கிட அமிர்தத்தை தேவர்சட்கு அருள் செய்த பெருமானை மறித்து திரை எறியும் கடலும் மலையும் மண்ணுலகும் விண்ணுலகும் திருந்திய ஒளியுடைய நட்சத்திரங்களும் எட்டுத்திக்கும்: திக்கில் உள்ளனவும் திரிந்தடும் சுடர் ஒளிகளாய சூரிய சந்திரர்எனும் ஓர் இரண்டும் பிறபொருளுமாகபரந்து நின்ற பெருமானை பெரும் தகையாம் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நான் எல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணை மேல்வரும் பயனைப் போகமாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கிடைத்தற்கு அரிய துணையை அடியார்கள் அல்லல் யாவும் தீர்த்திடும் அருமருந்தை; அகன்ற இப்பூமியில் தோன்றி தம்முடன் தமக்கு உறுதி எனவரும் துணைவரையும் சுற்றத்தவரையும் எல்லாப் பற்றினையும நீகி; கேட்க காண மணக்க சுவைக்க இன்புற வைத்திடும் மேலான் புலன்களினை உள்ளத்து அடக்கி; அவற்றின் வழி செலாது அத்துடன் இனிய பெண்களுடன் பொருந்திய அணைமேல் அமர்ந்து வருகின்ற போகத்தையும் மாற்றி அவையாவும் சிவன் அருளிற்கு அணையக் கொண்டு எல்லாம் ஒன்று என்ற பொதுவையும் நீக்கி சிவன்ஒருவனே தலைவன் எனநினைந்து அன்புற வல்லார்க்கு என்றும் பெரும் துணையாயவனை பெருப்பற்றப் புலியூரில் இருப்பவனை பேசாத நாள் எல்லாம் பிறவாத நாள். 5

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ டாறங்க மாயி னானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் ஆரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கை மிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கரும்பினை ஒத்த மொழிபயிலும் உமையம்மையார் பாகத்தானை, காணும் திருவுடையார்க்கு பருத்த வயிரத்தின் மலை போன்ற காட்சியாலை, அரும்பாகமலரும் பூவாய கொன்றை மலர் மாலையானை அரிய வேதங்களுடன் அங்கங்கள் ஆறுமானானை வண்டுகள் படியும் வாசமலர்ச் சோலை சூழ்ந்த தென்னாட்டின் திருவாரூர் அமர்ந்த சுடர்க் கொழுந்தை; என்றுமே கலக்கமறியாத ஒளியை மிக மிகமேலான பெரும் பொருளை பெரும்பற்றப் புலியூர் இருந்த பெருமானைப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாளே. 6

வரும்பயனை எழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னைச்
சுரும்பமருங் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

இப்பிறவியின் நன்மையால் வருகின்ற பயனை ஏழுநரம் புடைய யாழின் ஓசையாயவனைமேருவைவில்லாக தேவர்கள் செய்தஅரியான அம்பைக்கொண்டு;பெரும்பயம்செய்து துயர்புரிந்தஅவுணரதுபுரங்கள் மூன்றும் எரியக்கோத்திட்ட கடவுளை: அலையுடைய கடலில் உள்ள நஞ்சினை உண்டபெருமானை; வண்டுகள் மொய்ப்ப அணிந்த பூச்சூடிய அழகிய பெண்களது கடைக்கண் நோக்கத்தினுல்கலங்கி அவர் இன்பததை நாடாத சிந்தை உடையவராய் உலகினை மதியாது நீக்கிய பெரியோரது உள்ளத்தே விளையும் பயனுனவனை; பெரும்பற்றப் புலியூரில் அமர்ந்தானைப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாள். 7

காரானை யீருரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சியே கம்பன் தன்னை
ஆரேனும் அடியவர்கட்கு அணியாசன் தன்னை
அமரர்களுக் கறிவரிய அளவி லானைப்

[ தொடர்ச்சி 7–ம் பக்கம் பார்க்க ]

## மாதோர்பாகம் .......

*( 1–ம் பக்கத் தொடர்ச்சி )*

சிறப்புகளுடன் உலகம் வளர்ந்து கொண்டு போனுலும் மக்களிடையே முன் சொல்லிய மூன்றும் வளர்வது மிக அரிது. இந்த மூன்றும் யாரிடம் பொருந்திடக் காணலாம் என்றுல் சிவனருளின் தாகமுடையாரிடமே நாம் கண்டு கொள்ள முடியும். அதுவன்றி ஏனைய உலகார்த்த பந்தங்களிலே மிகுந்துள்ளவரிடத்து நாம் இவைகளைக் கண்டு கொள்ள முடியாது. வாயால் எல்லாரும் நன்குடன் போதிப்பார்கள். ஆனுல் தமது போதனையை தமது செயலில் கூடக் கடைப்பிடிக்கமுடியாது தவிப்பவரை நாம் உணர்வோம். நாயன்மாரது பதிகத்தின் உட்கருத்தை உணர்வதானுல் அது எமக்குஎத்தனையோ அறிவுரைகளை தருகின்றன. தேவாரப் பண்களின் இசை ஓசையிலும் கருத்தில் வரும் அறவுரையின் நன்மையே கொள்ள வேண்டும். இதனை பண்ணினை ஒதிவளர்க்கின்றனம் என்பவர் தமது கருத்தில் கொள்ளல்நலம்.

சீலத்தான் பெரிதும் உகப்பவன் சிவன் என்றும் சீலந்தான் சிவனது வடிவமாகும் என்றும் எமது முன்னேர் எமக்கு வழிவழியாகக் கொண்டிடும்படி மொழிந்துவிட்டுச் சென்றிருக்கிறுர். தற்புகழ்ச்சி அகந்தையின் ஆணிவேர் என்று சொன்னுல் அதை நாம் மிகைபடச் சொல்லவில்லை. அது உண்மை. அதனை "தினைத்தனையோர் பொறையிலா உயிர்போம் கூட்டை (எமது உடலை) பொருள் என்று மிகஉன்னிமதியால் இந்த அனைத்துலகும் ஆளலாம் என்றே பேசும் ஆங்காரம் தவிர் நெஞ்சே' என; தமக்கே புத்திபுகட்டுகிறுர் திருநாவுக்கரசர். இந்த ஒரு வாக்கியம்ம எம்மை மேலான ஒருநிலைக்குத் தூக்கிச்செல்ல உதவிடும். நாம் ஏதோ வகையாக பிறந்தோம் இவ்வுலகில். பல பெரிய காரியங்ளுடன் மதிப்புடன் வாழ்கின்றேம்; வாழமுற்பட்டோம்; என்கின்ற அதறகாக நல்ல தொரு வீடு கட்டி நடபபாக நடந்து நன்கு உடுத்து பின்னர் நரைத்து முடிவில் இறந்த பொழுது ஒருவரைப் பலரும் அந்தமனிதன் இருந்தாலும் கெட்டிக்காரன் ஏதோ இருக்கும்தனையும் பாடுபட்டுத் தேடி வீடுவாசல் கட்டி கொஞ்சம் மதிப்பாக வாழ்ந்து இப்ப செத்துப்போச்சு. பரவாயில்லை. செத்தாலும் இது எல்லாம் சரியாய் நடத்திப்போட்டே செத்தது என்று பலபடப் பாராட்டிப் பேசுவார். ஆனுல் அப்படி வாழ்ந்த அவர் செத்த பின் எப்படியானுர் என்பதைப் பற்றிப் பேச்சு இல்லை பேசவும் முடியாது. அல்லது இப்படி பேசுபவர் எல்லாம் தமக்கும் ஓர் சாவரும் என்ற நினைப்புடன் பேசுவதில்லை. அதைப் பற்றி குசாலாகப் பேசும் போது அங்கு அக்கறையும் வருவதில்லை. அந்த ஒரு அக்கறையை சுந்தரர் கொள்கின்றுர். தமது ஒரு தேவாரத்தில் சொல்கின்றுர் "நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார்" என்ற சொல்லாய் அல்லவோ வாழ்க்கை முடிகின்றது என்பதை நான் உணர்ந்து சிவனே! உன்னைத் தொடர்ந்தேன். தொடர்ந்து ஓடிவரும் எனக்கு உய்கின்ற ஒருமார்க்கம் நீ சொல்லு என்று சிவனையே கேட்கிறுர். இதைப் பற்றி நாமும் கொஞ்சம் சிந்தித்தால் நல்லதல்லவோ? இன்னமும் பெரிய புராணம் என்றதன் கருத்து அறியாமை எனும் உள்ளத்துஇருளைப்போக்க வல்லது என்பதே புற இருள் நீங்க சூரியன் வரலும் எமக்கு எத்துணை மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதே போன்று உள்ளத்தில் சிவ ஒளிபெருகியபோது; அளவற்ற ஆநந்தம் பிறக்கிறது. அதுவன்றி அதுகாறும் அங்கு குடியிருந்த இருளாய வஞ்சனை பொருமை உலோபம் சுயநலம் அதிகாரம் யாவும் நீங்கி அன்பு இரக்கம் கண்ணியம் கட்டுப்பாடு ஒழுக்கம் இவை பெருகுவன. இத்தகை உள்ளத்து இருளை; மீள மீளத் தெரியாமல் எம்மைத் துயரத்து பிறரைத் துயரத்து சமூகத்தைத் துயரத்து ஒருங்கே ஆழ்த்துகின்ற அவைகளை இப்பெரியபுராணம் நீக்கும் என்பது உறுதி.

சிலரிடத்தே ஒருகொள்கைஒன்று உண்டு. தமக்கு உலகில் சிலவாய்ப்புக்களால் நல்ல பேறுகள் அரசாங்கத்திலோ அல்லது சமய ரீதியாகவோ வந்தலடந்து கொண்டால் அப்போது அவர்கள் தம்மிடமுள்ள பெருமைகளை பொருளாக எண்ணி தோசைக்கு சம்பல் தொடுவது போல சில சில வேளை பெரிய புராணத்தையும் எடுத்துக் கொள்கின்றனர், ஆனுல் இதில் ஊறி அன்புகொண்டு இதன்வழி ஒழுகுவாரைக் கீழாகவும் மதிக்கிறுர். ஏனெனில் தம்மைப்போல் பெருமையான நிலையில் இப்புராண சீலத்தைநன்குணர்ந்து கடைப்பிடிக்கும் தூய உளமுடைய அன்பர் இல்லை என்ற நினைப்போ; அல்லது இத்தகையோரால் தமது பெருமைக்குச் சிறப்புக்கள் இல்லை என்ற எண்ணமோ தெரியவில்லை.

இன்றைய உலகில் பெரும்பாலும் சிவவழிபாட்டின் மகத்துவத்தை இத்தகையோர் உணரத் தவறுகின்றுர் என்பதே கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. இத்தகையோரது அகம்பாவத்தை நினைத்தால் யோகவாமிகள் தம்மிடம் சென்ற ஒருவரிடம் "சற்றே விலகிஇரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்" என மொழிந்த பரிபாஷையின் கருத்தை நினைவில் கொள்ளலாம். இதனை நாம் இங்கு குறிப்பிடாமல் விடலாம். ஆனுல் மக்கள் நலன்கருதி அடியார்கள் மேன்மையை உணரவும்; சிவன் அன்றி வேறுதெய்வம் இல்லை என்பதை மக்கள் உணரவும்; நாம் இதனை குறிப்பிட்டுள்ளோம். வேறுயாரிலும் குறைகாண்பதற்கன்று.

பெரிய புராணம் முழுவதையும் ஒருவர் ஓதிட முடியுமானுல் உண்மையில் அது அவரிடம் நன்மையை பெருக்குவிக்கும். இந்த நிலையினை சேக்கிழார் இப்புராணத்து பல இடங்களில் எடுத்து ஆளுகிறுர். இதன்வகைகளை இவர்பாடல் பலவில்காண முடியும். "நன்மைதரும் அருள்நெறியே வந்தணைந்து" என்ற ஒருவார்த்தையே அருள் நெறியின் சிறப்பை பெறுதல் எவ்வளவு மேன்மையானது என்பது தெளிவாகிறது. சேக்கிழாரை ஏனைய உலகில் உள்ள புலவர் வரிசையில் நாம் எண்ணமுடியாது. அவரை நன்மை தீமை யாவும் கடந்த ஓர் முனிவராகவே கருதமுடியும். அன்றியும் ஓர் புலவர் மற்றையோரிடத்து எதிர்பார்க்கின்ற மதிப்பையோ பாரட்டுதலையோ எதிர்பார்த்து இப்புராணத்தைச் செய்தாரல்லர். இவர் தமது உய்தியின் பொருட்டு அடியார்கள் செய்த திருத்தொண்டைத் தாம்போற்றிடும் தொண்டாகவே கொள்பவர். பெரும்பான்மையில் இதனை "மொழிந்தேன் உய்ந்தேன்" என்றெல்லாம் பேசுதலைக் காண்க. திருஞான சம்பந்த சுவாமிகள புராணத்து இவர்பாடிய அற்புதம் நோக்கி நமதுதுயரை போக்கிட நாம் ஓதி உய்ந்திட அப்பகுதிஏற்ற தொன்றுவது.

இன்னமும் இப்புராணத்துஇவர் தாம்வழிபடும் குருமூர்த்தமாகச் சுந்தரர் பெருமானைக் கொள்கின்றுர். ஒவ்வொரு சருக்க முடிவிலும் ஒல்வொரு துதி காணப்படும். அதில்தான் அடியார் தொண்டினைப் பரவுவது தமது பாச வினையை எம்பிரான் சுந்தரர் பறிப்பார் என்னும் பற்றுலே என்ற கருத்துக்கள் தென்படுவன. முதலைவாய் பிள்ளையை மீட்ட அரும்செயலைச் சொல்லிப் போற்றும் போது பிறவி எனும் பெருவாயில் நின்று எம்மை மீட்டார் அவர் என்ற துணிபுகள் அற்புதமாகப் பேசப்படுகின்றன.

தமக்கு இப்புராணம் பாடற்கு தகுதியா; எனஅறிந்து பாடுவீர்? எனக்கேட்பார்க்கு "வான்நிழல்" அசரீரி தந்த உலகெலாம் என்பதே பொருளாகும் என்பது தெளிவாக மொழிகின்றுர். இன்னமும் இப்புராணத்து தனது அறிவிற்கு உண்மை இவை எனத்தெளிவுகண்டுதான் அடியார்கள் வரலாறு பாடி இருக்கின்றுர். அடியார்களது சீலம் அற்புதமாகப் பேசப்படுகின்றது. பேசும்போது பொற்புடையதாகவே பேசுகின்றுர். வேறு புராண காவியம் செய்யும் புலவர் போன்று நல்லதை [illegible] சொல்லி குற்றமுடையனமாற்றி இல்லாதனவற்றை முகமனுல்

( தொடர்ச்சி 7–ம்பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனே சிவலோகா தீயாடி செய்வகை அறியேன்

**இளம்பருவத்து புலன்கள் ஆட்ட ஆடி நொந்து மூப்புற்ற பருவத்து பெறும் துன்பத்தை திருவிடைமருதூர் தலத்திருந்த பெருமானுக்கு, எம்பிரான் சுந்தரர் எடுத்துப்பாடிய பாடல் இவையாகும்**

குங்கும வியாபாரி கழுதையை வளர்த்தான். கழுதையை அவன் வளர்த்த நோக்கம் குங்குமப் பொதி சுமப்பதற்காகவே. அதன் மீது பரிந்தல்ல. அந்தக் கழுதை தனது இளம் வயது முதிரு மட்டும குங்குமம் சுமந்து களைத்து மூப்பால் நடக்க முடியாது போய் விட்டால் பின்னரும் அவன் கழுதைக்கு தீன்கொடுத்து பக்குவமாகப் பேணவா போகின்றான். இல்லை அதனை அப்பாலே அடித்து துரத்திவிடுவான். ஏனெனில் கழுதை குங்குமம் சுமக்க உதவுமே ஒழிய வேறு பின்னர் அது வீட்டில் நின்று ஏதும் பிரயோசனமில்லை. இதனை சுந்தர மூர்த்தி சுவாமிகள் உணர்ந்து இந்த எமது வாழ்வின் நிலையும் அப்படித்தான் என்பதை நயமாகச் சொல்லுகின்றார். நாம் இவ்வுலகில் நமது இச்சைக்காக புலன்கட்கு அடிமையாகி அதனால் யாவர்க்கும் பிரயோசனமாக இருக்கும் துணையும் எம்மைப் பேணுவார். அந்தத் தன்மையை நாம் இழந்த போது எமது நிலையும் கழுதை போனமாதிரியாகத்தான் தேசாந்திரியாக வெளிக்கிடவேண்டும்; வெளிக்கிட்டு எங்கே போறது? எல்லா இடத்தும் நிலை ஒரேமாதிரியாகத்தான் இருக்கும்.

குங்கும வியாபாரி கழுதையைத் துரத்தினால் இன்னுமொருவர் அதை பிடித்து தீன். கொடுப்பாரா? ஆகவே களைத்துப் போன கழுதை எங்கு போனாலும் நிலை ஒன்று தான். அதனால் செப்பமாக மேய்ந்திடவும் முடியாத ஓர் நிலையில் அதன்கதி எப்படிச் சிந்தித்து பாருங்கள். அதனை சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது நிலைக்கு எடுத்துக் கொள்கின்றார் இத் தேவார ஆரம்பத்தில். மற்று அது போல என்றே தம்மை ஒப்பிடுதலின் நோக்கம் கழுதைபோல ஒருவனுக்கு அடிமையாயிருந்து சலித்துள்ளதுபோல நானும் சுற்றம் சூழல் உறவு முறை இவர்க்காக வேண்டி என் புலன்களுக்கு அடிமையாகி அவை வேண்டியதைப் புரிந்து உள்ளம் தடுமாறி அந்த புலன் வழிப் படும் படுசுழியில் அகப்பட்டேன் எந்தை பிரானிரே! என அவர்க்கு இதை மொழிகின்றார். இந்த தனது தவறை உணர்ந்து வருந்திடும் தன்மனதை நோக்கி மனமே நீ இனி அழுது என்ன செய்யப் போகின்றாய்? உணரவேண்டிய காலம் தவறிப்போச்சு என்று தேறுதல் சொல்லி திரு இடைமருதூரில் இருந்திடும் ஈசனை வேண்டுகிறார். அப்பனே நெற்றிக் கண்ணனே! கடவுளே என் இளம் பருவமெல்லாம் தேவரீரை போற்றுதல் செய்யாத பேயேனுக்கு இனியாகிலும் ஓர் உய்வகை அருளாய் என மொழிகின்றார்.

திருவிடை மருதூர் என்னும் தலத்து இறைவன் ஆநந்தமூர்த்தியாக விளங்குகின்றார். எத்தனை மக்களது பாவங்களையும் போக்கி உய்யச்செய்யும இடம் அத்தலமாகும். தன்னையே தான் அருச்சித்துக் கொண்டு இறைவன் அற்புதமுடன் அருநதருளும் பதி அது. அதனிடத்து எம்பிரான் சுந்தரர் மொழிந்த திருப்பதிகத்தை கீழே தருகின்றோம். ஒவ்வொரு நாளும் ஓதி உங்கள் வாழ்க்கையில் மூப்பினால் வரக்கூடிய சங்கடங்களைத் தவிர்த்திட நல்லதொன்றாகும் இப்பதிகம; இந்தத் திருப்பாடலகளில் எல்லாம் புலன்களை கட்டுப்படுததினால் பெருகிடும் நன்மைபற்றியும் இறைவன திருவடி தொழாமையால் நேர்நததுயரம்பற்றியும் உலக இன்பங்களில இழுபடும் இயல்பான செயல்கள்பற்றியும்மொழிகின்றார் அதனைக்காண்க.

பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நான்உழன் றுள்தடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீஇருந் தென்செய்தி மனனே
அங்க ணாஅர னேயென மாட்டா
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

கழுதை குங்குமப் பொதி சுமந்து களைத்து விட்டால் பாழ் நிலையில் போகத் துரத்துவார்கள். அது போல நானும் உலகில் பழுதுகளான செயல்கள் பல புரிந்து உழன்று உள்ளம் தடுமாறி அப்பழுதுகள் நின்றும் நீங்கமுடியாததொரு படுசுழியில் அகப்பட்டுக் கொண்டேன். எற்தை பிரானே! என்செய்வேன் என்மனமே உனது தவற்றிற்கு இப்பொழுது அழுது கொண்டிருந்து என் செய்வாய். நெற்றியிற் கண்ணுடைய கடவுளே காக்கும் கருணையனே என்று இப்பொழுது என் தளர்ச்சியால் மொழிய மாட்டாத பேய்போல் வேனுக்கு ஓர் உய்யும் வகையை நீ அருளாய் திருவிடைமருதூரில் உறைகின்ற எந்தை பெருமானே. 1

நரைப்பு மூப்போடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை

(தொடர்ச்சி 5–ம் பக்கம் பார்க்க)

# விழா எடுத்தல் மிகுசுலபம் விளங்கவைத்தல் மிகு கடினம்

விழாக்கள் என்றபோது ஏதாவது ஒரு காரியத்தைச் சிறப்பித்திடும் நோக்கமுடன் எடுத்திடும் ஆடம்பரமாக விளங்குவதொன்றாகும். இந்த விழாக்கள் உள்ளத்து எழுகின்ற களிப்பை மிகைப்படுத்திக் காட்டுவதொன்றாகவே பெரும் பாலும் விளங்குவன. இந்தவகை ஓர்பொருளை அதன் சிறப்பைக் காண்பிக்கும் நோக்க மாக விழாக்கள் எடுப்பது இந்நாளில் பெரியதொரு சிறந்த காரியமாக இருக்கின்றது. இந்த விழா எடுத்திடும் போது எமது நோக்கம் நாம் சாதிக்க எடுத்த காரியத்தில் அதனைச் சிறப்புறச் செய்கின்றோம் என்றதை காண்பிக்கும் நோக்கமுமாகும். இவ்வளவு மக்கள் எமது விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர் என்ற ஓர் திருப்தியும் பெருமையும் எமக்கு ஏற்படுத்திக் கொள்வதற்காகவே இன்று விழாக்கள் எங்கும் நடைபெறுகின்றன என்றால் அதில் தவறில்லை என்றே நாம் எண்ணலாம். ஓர் காரியத்தை சிறப்புறவைத்திடும்படி செயல்படும்பொழுது; அதாவது அரசியலை நோக்கமாகவோ அல்லது கலையின் நோக்காகவோ அல்லது பண்டிகையாகவோ அல்லது ஏன் வழிபாடு செய்யும் ஓர் விழாவை எடுத்திடும்பொழுதுமே பெரும்பாலும் அதற்கு ஓர் சபை நிறுவப்படும். பொருள் சேர்க்கப்படும். அப்பொருள் கொண்டு தாம் எடுத்திடும் விழாவிற்கு மக்கள் திரண்டு வருவதற்காக வசீகரமுடன் பேசக்கூடிய சிலரை பெரும்பாலும் பெண்களை; இன்னும் ஓர் கலைநிகழ்ச்சியை தலைமை தாங்கிடற்கு ஓர் பிரமுகரை இவர்களைத்தேடி ஓர் மண்டபம் நிகழ்ச்சி நடத்திடத்தேடி அடுத்து ஓர் ஊர்வலம், ஓர் பிரசாரநிகழ்ச்சி இவையாவும் இடம் பெறவைத்தவுடனே மக்கள் அந்த நிகழ்ச்சிகளை அந்தந்த் பேச்சாளரை ஒருக்கால் கண்டுகளிப்போம் என்றநோக்கத்துடன் திரளுவார்கள். மேளம் நடனம் விருந்து உபசரிப்பு எல்லாம் பிரமாதமாக நடக்கும். இப்படியாக ஓர் நற்காரியத்திற்கு விழா எடுத்திடும் போது மக்கள் நிறையத் திரளுவார்கள். அந்நேரம் பார்ப்பதற்கு கண் குளிர்ச்சி; விழா எடுப்பார்களிடையே மலர்ச்சி, பெருமிதம். தாம மிக நன்றாக அந்தவிழாவை நடத்தினோம் என்ற உற்சாகம் இவை பெருகுகின்றன. பேச்சுக்களில் உவமைகள் கரைகாண முடியாதவகை பாராட்டுகளில் கையாளப்படுவன. ஓர் பெரியவர்க்கு ஓர் விழாவை நாம் நடத்திடும் போதும் இவையாவும் நன்கு விளங்குகின்றன. ஆனால் அத்தகைய அப்பெரியவர்க்கு அல்லது இன்னுமொரு காரியத்தை சிறப்பித்திட நாம் எடுத்த விழாவல் எத்தனை மக்கள் அந்தப் பெரியவரின் அல்லது கொள்கையின் உண்மைக் கொள்கையை விளங்கிக் கொள்கிறார்; அல்லது அதைக் கடைப்பிடிகக முடிகின்றனர்? இதற்கு விடை நாம் சுலபமாகக் காணக்கூடியது அன்று.

அருமையாக எமக்குக் கிடைத்த பிறவியிலே உண்மையில் நாம் ஈடேறவேண்டுமென்றால் நம்மை உயர்வான நெறிக்கே தூக்கிவிடவல்ல ஒருவரையே பின்பற்றலாம். அத்தகைய பெரியோரின் கொள்கை யாதாவது என்று தெரிந்து கொண்டால் அல்லவோ நாம் அதைப் பின்பற்றலாம் அதை அறியாதார் தெரிந்து கொள்வதற்கு ஓர் விழா மூலம்விளங்கிட வைக்கலாமோ? அப்படியாயின் அதுகைகூடிட எவ்வகை புரிதல் வேண்டும்? இது சிந்திக்கவேண்டிய காரியம் ஒன்று.

இத்தகைய விழாக்களினை நாம் உணர்ந்து பார்த்தால் நாம் விழாவெடுத்தோம் என்ற இன்பம் பெருகுமே ஒழிய அப்பெரியவரது சீலங்களை மக்களிடை விளங்கிட வைத்தோம் என்பது சந்தேகத்திற்குரியதுதான்? ஆகவே விழாக்களின் நோக்கம் ஓர் கருமத்தின் சீலத்தை விளங்கவைப்பதற்காக என நாம் துணிந்திட முடியாது.

இன்றையநாளில் எந்த ஒரு விழாவையும் நோக்கினால் அவை அவை விண்ணாணமும் கேலியும் நிறைந்த தொன்றாகவே காணப் படுகின்றன. கோவில்களில் நடந்திடும் விழாக்களில் எல்லாம் இக்காலத்தில் ஒருவருடைய பணத்தின் நிலையே பெரிதும் பிரதிபலிப்பதாக விளங்குகின்றதே ஒழிய அந்த ஆலயத்து இறைவன் ஒருவன் இருக்கின்றான் அவன் முன்னிலையில் நாம் இப்படிச் செய்யலாமா? பேசலாமா? சிரிக்கலாமா? கை தட்டலாமா? கூக்காட்டலாமா? என்ற அந்த இறைவழிபாட்டின் நயம் பத்திமையாவும் இன்றியே விநோதங்கள் விபரீதங்கள் கூத்துக்கள் கதா

(தொடர்ச்சி 4–ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர தீபம்

இதழ் 1 | பிங்களவருஷம் புரட்டாதி 1 வெள்ளிக்கிழமை | சுடர் 2

## எமது தீபத்தின் பணி விளங்கிடவைத்தலே

நமது முன்னைய பெரியோர்கள் தத்தமது பிறவியின்பயனை நன்குணர்ந்து வாழ்ந்து அழிவிலாத உவமை கடந்த இன்பத்தை அடைந்து; அதன் விளைவாக தாம் உணர்ந்த உண்மைகளை வருங்கால சந்ததியினருக்கும் நன்மை பயக்குமாறு பாடலாலும் முது மொழிகளாலும் சொல்லி வைத்துப் போயினர். இவர்கள் கண்ட உண்மைகள் காலத்தால் மாறு படுவதில்லை. இன்று புதிதாவதல்ல எப்பவோ தொட்டு நிலையாக உள்ளன. இந்த வகையாக நம்முன்னோர் கூறிவைத்த உண்மைகளை நாம் ஒருநோக்கமும் இலாது எமது மக்கள் வாழ எடுத்து அறிய வைத்திட வேண்டும் என்றஅவா என்னிடம்சில காலமாக தலைதூக்கியது.'

எனக்குற்ற நிலையில் நான் அவற்றை மொழிந்தால் ஏற்கப்படுமோ அல்லது என்னிலும் பார்க்க மேலானவர் பலர் இருப்ப நாம் ஏன் இதை ஆரம்பித்தல் வேண்டும் என்று பல நினைப்புக்கள் தோன்றி என்னை உறுதி கொள்ளவிடாது தடைப்படுத்திய பொழுதும் அது துணியவேண்டி நேர்ந்துள்ள பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் ஒன்றை கீழே தருகின்றோம்.

எனது நண்பரொருவர் சிலநாள்களின் முன்பு எங்கோ போய்க் கொண்டிருந்த என்னை மறித்து ஒருகேள்வியினைக் கேட்டார். அதுதான் ''உமது திருநாவுக்கரசர் கையில் ஏன் உழவாரப் படை வைத்திருக்கின்றார்? அதன் அர்த்தமென்ன? என்று. நான் திடுக்குற்று அவருக்கு மொழிந்த பதில்; எனக்கு இப்பொழுதுள்ள அவசர வேலையில் உமது கேள்விக்கு பதில் சொல்ல முடியாது. நான் பெரிய புராணம் உரை பதிப்பிப்பதால்என்னை நீர் சோதிக்கின்றீரோ? என்றேன். அப்பொழுது அவர் அருகிருந்த ஒருவர் எனக்கும் அவர் நண்பர்; கேள்விகேட்டவரைப் பார்த்து உவரையோ உது கேட்க வேண்டும்.நான்உமதுகேள்விக்குபதில் சொல்கிறேன் அதுதான் திருநாவுக்கரசர்தன்உள்ளும் புறம்பும்தூய்மைசெய்திடத் தொண்டுகொள்ளும்படையாகும் என்றுமொழிந்துஎன்னைப்பார்த்து என்ன நான் சொன்னது சரிதானே! என்றார். உண்மையாக நான் திகைத்து நின்றேன். ஏன் என்றால் அந்த கேள்வி கேட்டவரும் பதில் சொன்ன வரும் எனது சமயத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. நான் திரும்ப அவரிடம் சொன்னேன் எனக்கே தெரியாதிருந்த அளவில் மிக நுணுக்கமான கருத்தை இன்று நீங்கள் சொன்னீர்கள். நீங்களே நல்ல சைவர்களானீர் என்று வேடிக்கையாகப் பேசி விட்டு சரி இப்போது ஒரு காரியத்திற்காக அவசரத்தில் போன என்னை இடைமறித்து இந்த கேள்வியை எழுப்ப வேண்டிய நிலை ஏன் வந்தது! பெரிய புராணத்து நான் எழுதிய உரையை நீங்கள்வாசித்து ஏதாகிலும் தவறுகண்டீர்களோ? அல்லது கண்டனம் எழுதப் போறீர்களோ என்று வேடிக்கையாகக் கேட்டேன். அதற்கு அவர்கள் சிரித்து விட்டு இல்லை உங்கள் திருநாவுக்கரசரது உழவாரப்படையின் கூர்மை பற்றி நேற்று வெளியான தொரு பத்திரிகையில் ஆசிரியத் தலையங்கத்தில் விமரிசனம் செய்யப்பட்டது. அதை வாசித்தபின் உங்களைக்கண்ட நேரம் சைவத்திற்கென இந்தளவு தொண்டு செய்வாரிடம் கேட்போம் என நினைந்தோம் என்றனர். அவர்கள் குறிப்பிட்டபடி அப்பத்திரிகையின் ஆசிரியத்தலையங்கமான ''சவர அலகுகள்'' என்றதில் இக்காலத்துள்ள சவர அலகுகள் திருநாவுக்கரசர் வைத்திருக்கும் உழாவாரப் படையிலும் கூர் மழுங்கி உள்ளன என்று மொழியப்பட்டிருந்ததாம். உண்மையில் அதைக்கேட்டவுடன்ஓர் பத்திரிகையின் ஆசிரியர் திருநாவுக்கரசரது உழவாரப் படையைபற்றி இப்படித் தன் அறிவில் நினைந்திருந்தால் பிறர் நிலையாது? என்றே நினைந்தேன். எமது நாயன்மாரை அவர்கள் ஏதோ எங்களைப்போல் வாழ்ந்த ஒருவர் என்று அந்த பத்திராதிபர் நினைத்தாரோ அல்லது தன்னைப்போல் திருநாவுக்கரசரும் உழவாரம் தீட்டி இருப்பார் என நினைத் தாரோ? என்னவோ எனக்கு அது தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் எனது சிந்தையில் தெளிவுபட்டது. இன்று எமது சைவமக்களிடையே எமது பெரியோராய நாயன்மாரது கதைதெரிந்ததே ஒழிய் அவர்களது சீலம் பற்றிய பெருமைகள் பெரும்பாலும் யாவர்க்குமே தெரியப்படாதே உள்ளது என்ற வகையாக. எமது சைவமக்களுக்கு மட்டுமன்றி தெய்வம் உண்டு என்று அதன் அருளைப் பெறுவது தான் பிறவியின் பயனாவது உறுதியாவது என விரும்புகின்ற எந்த ஒரு சமயத்தவரும் எமது நாயன் மாரது தெய்வீகக் கொள்கையை சீலத்தை நன்குணர்ந்து இவ்வுலகில் இருக்கும்தனையும் தாழ்வின்றி வாழ்வதற்கு வழிக் கொள்ள அவரை தெளிவுபடுத்திடும் நோக்கமாக; எங்களது நாயன் மாரது சீலங்களை கொள்கைகளை அவர் அடைந்து கொண்ட உன்னத நிலைகளை; நான் எனது குருபரனின் நல்லருளால் உங்கள் அனைவர்க்கும் விளங்கவைத்திடற் காகமேற் கொண்ட புண்ணியமான புனிதம் நிறைந்தபணியே இத்தீபத்தின்பணியாகும்.

## விழாவெடுத்தல் ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காலாட் சேபங்கள் இசைகள் இவையாவும் இடம்பெறுகின்றன. இத்துடன் இத்தகைய நிகழ்ச்சிகளின் ஓசையைப் பெருக்க ஒலி பெருக்கி ஒன்றுஇரண்டு மூன்று என்று பலமைல் தூரத்தில் இருப்பாரும் சாந்தியுடன் வாழ முடியாதபடி குழறுகின்றன. கேட்கவே ''ஐய்யோ இதென்ன சங்கடம்'' என்று மனிதன் மனம்நொந்து நொந்து வேதனைப்படும் படியாக விடையங்கள் பலவும் இவைதானா இறைவன் சந்நிதியில் நடைபெற வேண்டும் என்ற சந்தேகமும் கொண்டிட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

எமது முன்னோர் இறைவனுக்குக் கோவில் எடுத்தது அறியப்படாத அவனை உருவத்தில் அவன் மொழிந்த ஆகமவிதிப்படி பூசையாற்றி வழிபட்டு உய்தி அடையவன்றி வேறிற்காக அதை ஓர் களியாட்டத்திற்குரிய இடமாக்கவல்ல. இந்த நிலையில் இந்த வேடிக்கை விண்ணாண நிகழ்ச்சிகளை, நாம் ஆகமங்களை நன்கு விளங்கியுள்ளவர் எனக் கருதிடும் அந்தணர்களே ஒலி பெருக்கியில் தொடரும் களியாட்ட நிகழ்ச்சிகள் பற்றி விமரிசனம் செய்கிறார் அல்லது அறிவித்தல் செய்கிறார் என்றபோது நாம் இனிவேறு என்ன நினைந்திட முடியும். சிலர் கோயில்களில் எல்லாம் செய்யலாம்; கடவுள் பிழை பொறுப்பார். இது தெரியாதோ என்று கேட்கிறார்? அவர்களுக்கு நான் ஓர் பதில்சொல்ல முடியாது.

கோவிலில் சுவாமிக்கு பூசனை புரிந்த பிற்பாடு வேதபாராயணம் நடைபெறுகிறது. அவ்வேளை வேத சுலோகங்களை ஓதிவிட்டு ''ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி'' என்று மும்முறை அந்தணர்கள் மொழிகிறார். இது எக்காரணத்திற்காகமொழிதல் வேண்டும்', அடுத்து இறைவனுக்குப் பூசனை முடிந்து ஆசீர்வாதம் செய்திடும்பொழுது அந்தணர்கள் ''அயம் தருமம்'' என ஓதுகின்றார்கள்? அது எந்தத் தருமத்தைக் குறிக்கின்றது? எப்படி! எவ்வண்ணம் கடைப்பிடிப்பது? இது இன்றைய உலகில் யாருக்குமேனும் தெரியுமா? அதைப்பலரும் 'அது முந்திய காலத்து மூடநம்பிக்கை 'இக்காலத்தும் வேண்டியதோ' என்ற கொள்கை உடையராயும் இருக்கின்றார். மிலேச்சர் நாகரீகத்தில் ஊறிநிற்கும் அவ்வகை மக்களுக்கு நாம் பதில்சொல்ல முடியாது.முற்காலத்தில் எந்த ஒரு விழாவிலும் பத்திமை ஊற்றெடுத்தோடிடும். இக்காலத்து விழாக்கள் பெரும்பாலும் கண்காட்சியாகவே முடிகின்றது.

சிலவேளையில் வேதமந்திரம ஒலிபெருக்கிமூலம் கேட்கப்படும்பொழுது கர் கர் என்ற பதங்களும் ஒலிபெருக்கியின் நயமிலாக் கோளாறுகளால் ஏற்படுகின்றது. இவைகளை நோக்கிடும்போது மந்திரங்கள் அட்சர சுத்தியுடன் ஒதப்படல்வேண்டும் என்ற விதிகளை ஏன் அந்தக்காலத்தில் சொல்லிவைத்தார் என்ற ஐபப்பாடும் எழுகின்றன.

இக்காலத்தில் பாரதியார் வள்ளுவர்போன்ற இவர்க்கு விழா எடுக்கின்றனர். உதாரணமாக பாரதியார் தமது பாடல்களில் மிக மிக ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார். 'தீராத விளையாட்டுப்பிள்ளை என்னும் நயமுடைய பாடலில் உள்ள அதன் கருத்தை நாம் இலேசாக எண்ணமுடியுமா? அடுத்து வெற்றி எட்டுத்திக்குமெட்ட கொட்டுமுரசே என்ற பாடலில் 'நித்திய சத்தி வாழ்க என்று கொட்டுமுரசே' என்றபோது இந்த நித்தியசக்தி ஏதுவாயது? எங்கிருக்கிறது? அதை அடையும்வகை யாது? இவையெல்லாம் அந்த விழாவில் பிரதிபலிப்பதா? அடுத்து துரோபதை துகிலுரியப்படும் வேளையில் ''உலகினை மறந்தாள் ஒருமை உற்றாள் '' என்கின்றாரே இந்த உலகினை மறத்தல் எப்படி ஒருமைப்பாடு கொள்வதெப்படி என்று இன்றைய உலகில் உள்ள தமிழ்ப்பேரறிஞர்க்காகிலும யாருக்கேனும் முறையாகத் தெரியுமா?

தமிழுக்கு விழா எடுக்கிறார்; தமிழ் சிறந்திட வாழவேண்டுமென்று பல கரகோசங்களிடையே பெருமுழக்கங்கள் நிகழ்கின்றன. பேச்சாளர் முழக்குகின்றார்கள். தமிழ் அன்னையை சிம்மாசனத்தில் ஏற்றுவோம்; கொலுவிருப்பச் செய்வோம் என்றெல்லாம் பேசுவார்கள். இதற்காக எம்மிடம் படையில்லாவிட்டாலும் சாத்வீகமுறையில் போராட்டம் நடத்துவோம் என்றெல்லாம் முழக்கி வீதிகள்தோறும் ஊர்வலம் நடத்துகிறார்கள். மேடைகளில் பலரும் அடுத்து அடுத்துதமது வாயின் திறமையைக் காட்டுகிறார். உரிமைக் குரல் எழுப்புகிறார். ஆனால் அத்தகைய விழாக்களில் எத்தனை மக்களுக்கு சாத்வீகப் போராட்டம் அல்லது சத்தியாக்கிரகம் என்றால் என்ன? அந்நச்சத்தி எவ்வாறு எமது எதிரிகளை வசப்படுத்தும் அல்லது விலகச்செய்யும் என்பது தெரியுமா? நாம் எல்லாம் ஒவ்வொரு நாளும் பேச்சுக்கள் மூலமாக எழுத்து மூலமாக துண்டுப் பிரசுரமூலமாக உணர்ச்சிகளைத் தூண்டும் அந்த ஒருகணத்தில் எல்லாரையும் உணர்ச்சி வரச்செய்கின்றோம். உணர்ச்சி வெள்ளம் கரை கடந்தபோது சில காரியங்கள் நடந்தேறிவிடுகின்றன. இதனால் பல அல்லல்கள் துன்பங்களையும் பின்னர் மக்கள் அனுபவிக்கும் படியும் நேர்ந்திடுகின்றது. இந்தவகை சாத்வீகப்போராட்டம் உண்மைப் போராட்டத்தில் முடிந்தும் விடுகின்றது. விழாக்களினை மிக உற்சாகமுடன் நடத்தி மிக துக்ககரமான விளைவுகளை நாம் அநுபவித்துக் கொண்டவை சமீப காலங்களில் நடைபெற்றதை நாம் அறிவோம்.

நாம் இன்று ஓர் புதுவகைக் கலாச்சாரத்தை மேற்கொண்டு அதில் எமது முன்னைய பெரியோர் கையாண்ட சில நல்வழி வகைகளையும் கையாளும்போது விளக்கக் குறைவால் தவறான வகையில் கையாண்டு அதனாலே இரண்டுதோணியில் கால் வைத்தார் போலத்தான் ஆகிநிற்கின்றோம் ஆகவே ஓர் கருமத்தை நாம் சாதித்திடும் பொழுது கோலாகல விழா மூலம் மட்டும் அதனை சிறப்புறக் கொள்ள வைத்திட முடியாது. முதற்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனே சிவலோகா .....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உரைப்பன் நான்உன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

நரைப்பு மூப்பு பிணி என்பது எனக்கும் வரும் என்பதைஅறியாது எனக்கு ஏதும் நன்மை தராத செயல்களைப் புரிந்திடத் துணிந்து செய்து களைத்து விட்டேன். அரைத்த மஞ்சள் அதுவேயாய தன்மையை அறிந்தேன். இனி இயமன் அவனது தூதர் வருவார் என்பதை நினைந்து பயந்தேன். இனியான் உனது திருவடி சேர்ந்திடமொழிவேன். ஆனல் அது எப்படிச் சேரலாம் என்று உணநர் வாழ்க்கையின் சீலம் ஒன்றுமே அறியாது வருந்து வேனுக்கு ஓம் உய்யும் வகை நீ தான் அருள் புரியவேண்டும் திருவிடை மருதூரில் அமர்ந்த எம் பெருமானே. 2

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருள்இலை நாளும்
என்னெ னக்கினி இற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேஉன சேவடி சேரா
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

புல்லின் நுனியில் பனியினை கொடுங்கதிருடைய சூரியன் கண்டால் போலும் இதுவே வாழ்க்கை. இதில் ஏதும் ஓர் பொருள் இல்லை. நாளும் நாளும் எனக்கென்ன குறை இன்றைக்கு நாளைக்கு எல்லாம் சரி என்று எண்ணி எண்ணி நாளும்போய் பெரிதும் இப்பொழுது இடர்பட்டுக் கொண்டேன். எந்தை பெருமானே! இந்த மூப்புவரும் முன்னமே உனது திருவடிகளைத் தேடி அடைந்திடாது கண்டதிற்கெல்லாம் வெறும் மூர்க்கம் கொண்டோனாக கோபக்காரனாக காலம் கழிந்து விட்டது. இன்னமாதல் இந்த நிலையில் நீ ஓர் உய்வகையை அருளாய் திருவிடைமருதூர் உறையும் எந்தை பெருமானே: 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடும்எம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீஎனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபிரானே.

முன்பிறவியில் செய்து கொண்ட பாவவினைகள் இப்பிறவியில் வந்து துன்புறுத்த அதனாலே யார்க்கும் அஞ்சாது துயர்புரிந்திடும் மூர்க்கனாகியே காலம் கழிந்திட்டது. இப்படியும் நான் என்அப்பனை மறந்து வாழலாமோ என நான் சிந்தித்து இவ்வாழ்க்கையில் பிரயோசன மில்லை எனத் தேறி உன்னை அடைதல் பொருள் என்று தேவரீர் பால் மனம் வைக்கவும் மாட்டேன்! அந்தோ வறுமையால் வந்து என்னிடம் இரப்போர்க்கு சிறிது சிறிதாதல் ஒன்று கொடுக்க மாட்டேன். அந்திக்காலத்து வெண்பிறை சூடிய எம் தந்தையே திருவாரூர் மேவிய தேவர்கள் தலைவா எந்தை நீ எமக்கு உய்வகை அருளாய் திருவிடைமருதூர் உறையும் எமது பெருமானே.

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமு றைஉனக் கேபொறை ஆனேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கைஈ தாகில்
இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

என் ஐயனே! என்னிடமுள்ள ஐந்து புலன்களும் எனது தெய்வீக சத்தியை அழிப்பார்கள். அவர்களை கட்டுப் படுத்தும் ஆற்றல் இல்லை. அவர்கள் தான் ஆட்சி உடையவர். அந்த ஐந்துபேரும் நன்றாக தமதுவகை எனக்கு துயர் பெருக ஆளலால் அவை சொன்னபடி நான் கண்டு கேட்டு உண்டு உடுத்து மணந்து அணைந்து மகிழ்ந்திட; அவை என்னை ஆட்ட ஆடி அவையும் எனது மூப்பு நிலையில் அற்று பழுதடைந்து போயின பிற்பாடு பின்னர் இப்பொழுது கடசியாக நான் உனக்கே ஓர் சுமையானேன். ஐயனே! இப்பொழுது உணர்வில் விழிப்புக் கொண்டு மெய்ப்பொருளைக் கண்டேன். இந்த வகையேயன்றி பலபட கண்டு கேட்டு உண்டு மணந்து அணைந்து மூப்படைய எனக்கும் யாருக்குமே வெறுப்பேற்கும் படியான இம்மானிட வாழ்க்கை இதுவாகில் அதை வேண்டேன். அப்படியான வாழ்வை நான் இகழ்கின்றேன் இனியாகிலும் எனக்கோர் உய்வகை அருளாய் திருவிடை மருதூர் உறையும் எந்தைபிரானே.5

விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் எனற பதத்தையும் மனிதனுடைய புலன்வழி அதிக இச்சை கொண்டு ஒழுகலால் வரும் தீமையையும் இன்று நாம் உணர யோகசுவாமிகள் ஓர் அன்பர்க்கு எழுதிய கடிதத்தின் ஓர் பகுதியை இங்கு தருகின்றோம் உணர்ந்து கொள்க.

அகமுகமாகு. அப்போதே ஆனந்த முண்டாம்; எதனுல் கண் காணுகிறது? எதனுல் காது கேட்கின்றது? எதனுல் மூக்கு முகருகின்றது? எதனுல் வாய் பேசுகின்றது? அதுதான் ஆத்துமா அல்லது கடவுள். எவ்வளவு சுலபமான வழி நினைத்துப்பார். அனைத்து முன் கைவசம். ஒருகணம் நீ ஊன்றி யோசிப்பாயானல், நீ அதுவென உனக்கு நன்கு புலனாகும். உன்னுள்ளே தெய்வீகத் தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உலகத்துக் கேக சக்கராதிபதி. இந்தத் தூய எண்ணத்தை மறந்தால் இறப்புப் பிறப்பாகிய சமுத்திரத்திற் கிடந்து திக்குமுக்குப்படுவாய்.

(தொடர்ச்சி 6-ம்பக்கம் பார்க்க)

## விழாவெடுத்தல் ....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கண் நமது கொள்கைகளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் பலாபலன்களை தக்கமுறையாக சிந்தித்துத் தெளியவேண்டும். தெளிந்த பிற்பாடு இதனை மற்றையோரும் உணரும் வகையாக தெளிவுபடுத்த முற்படவேண்டும். இது எப்படிமுடியும்? இலேசான தொன்றல்ல. இது முடியக் கூடியவகைகளை நாம் சிந்தையில் கொண்டு அதன் நிதானமான வழி நடத்திட முற்பட்டால் அச்செயல் நிச்சயமாகக் கைகூடும்.

ஈண்டு ஒரு கருமம் கைகூடிட வேண்டில் நமது முன்னேர் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதை இங்கு நாம் தருகின்றோம். அவை சரிதானு என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். ஓர் கருமம் அல்லது ஓர்செயல் நேர்ந்துள்ளபோது அதை எவ்வகை அவர் உணர்ந்தார் என்பதை கச்சியப்பர் தமது கந்தபுராணத்தில் பெரும் பான்மையான பகுதிகளில் மிகத்தூய்மையாக விளக்கிவைக்கின்றார். ஓரிடத்து அவர் மொழிகின்றார். ஓர்செயல் அல்லது ஓர்குறைபாடு நேர்ந்த போது எப்படி அதைக் கையாள வேண்டு மென்பதை! ஏதோ புராணப்பாடல் என்று இதனை நீங்கள் புறக்கணியாது உங்கள் கருத்தில் நன்கு அதனைச் சிந்தியுங்கள். நன்மையே பெருகும். அப்பாடலைக் கீழே தருகின்றோம்.

முற்றுற வருவதும் முதலும் அன்னதால்
பெற்றிடு பயன்களும் பிறவுந் தூக்கியே
தெற்றென உணர்ந்துபின் பலவுஞ் செய்வரேல்
குற்றமொன் றவர்வயிற் குறுக வல்லதோ·

ஓர் காரியத்தைச் செய்திடும்பொழுது அக்காரியத்தின் முடிவான வரலாறும் அது வந்துள்ளதற்கு மூலமான காரணமும் அந்தக் காரியத்தைச் சாதித்து முடித்தால் அதன் பயனாக விளைகின்ற பெறுபேறுகளையும் பிறவற்றையும் ஒருவர் கீர்தூக்கி அலசி ஆராய்ந்து தாம் செவ்வனே உணர்ந்த பின்னர் பலவற்றையும்செய்வாராயின் அவரிடத்தாக அவர் எடுத்துக்கொண்ட செயல் கைகூடாமற் போதற்கு தடைபடுத்தக்கூடிய ஓர் தீங்காகிய குற்றமொன்று வந்து சேர்ந்துகொள்வதற்கு வல்லமையுடையதா ?

இதன் சுருக்கக் கருத்து எந்த ஒரு கருமத்தையும் தீர ஆலோசித்து நல்லவர்கள் கருத்துக்களையும் ஏற்று உணர்ந்து செயல்படுவராயின் இவ்வுலகில் எவரும் எடுத்த கருமத்தில் தவறிவிடார் என்க.

அடுத்து ஒருவர்க்கு அல்லது ஓர் இனத்திற்கு அறவுரை வழங்குவது எப்படி என சொல்கின்றார்; திடீரென தமது சொந்த நலனிற்காக ஓர் விளைவை உண்டு பண்ணுது நாடு அல்லதுஇனம் நலம் பெறவேண்டின் அந்த அறவுரையின் சிறப்பு எப்படி இருக்கவேண்டும் என இப்பால் வரும் பாடலில் கண்டு கொள்ளுங்கள்.

பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினங்
கற்றவர் உணர்வையுங் கடக்கும் அன்னது
முற்றுறு கின்றதன் முன்னம் அன்பினேர்.
உற்றன கூறியே உணர்த்தல் வேண்டுமால்

முதற்கண் ஒருவன் பெற்றிட்ட பெரும் செல்வத்தால் விளைந்திடும் பெருமிதத்தில் தோன்றுகின்ற கொடிய கோபம் எந்த ஒரு கல்விமானுடைய நல்லுணர்ச்சியையும் கடந்து மேற்கொண்டிடும், ஆதலால் அவ்வாறு கோபமுற்றோரின் அன்பினருடைய கடமை அவருக்கு அக்கோபமானது முதிர்வதன் முன்னம் ஆவனவற்றை எடுத்துக்கூறி அவரைத் தெளிவுற வைத்தல் வேண்டும்.

கோபம் இயல்பிலே பொல்லாது, அது கொண்டவரையே தீங்குறச்செய்யும் ஆனல் பெரும் திருவுடன் விளங்கிடுகின்றவரிடத்து தோன்றிடும் கோபமோ மிகப் பொல்லாது. ஏனெனில் அது அவரையும் கெடுத்து திருவையும் கெடுக்கும். இப்படியான திருவுடைய நிலையில் வரும் கோபத்தை எந்த ஒரு அறிவாளி தீதென உணர்ந்திருந்தாலும் அவன் அறிவை அந்தக் கோபம் கடந்திடும். ஆகவே அன்பனுடைய கடமை இதை நன்றாக விளங்கி கோபமுடையாரைத் தெளிய வைத்தல்.

மந்தி ரத்தருந் தானையந் தலைவரும் மற்றுந்
தந்த மக்கியல் வன்மையே சாற்றிய தல்லால்
இந்தி ரப்பெருந் திருவுறும் உன்றனக் கியன்ற
புந்தி சொற்றிலர் இம்மொழி கேளெனப் புகல்வான்

இன்னமும் உமது இங்குள்ள மந்திரிமாரும் சேனுதிபதிகளும் உனது பிள்ளைகளும் தமக்குத் தமக்கு இயல்பாகும் வீரச் செயலைப்பற்றி இங்கு சொன்னர்களேயன்றி இந்திரபோகமான செல்வங்களுடன் வாழ்கின்ற நீ கெடாது இருப்பதற்கு ஏற்ற புத்திகளை ஒருவரேனும் சொன்னரில்லை. அவர்கள் தங்களது வீரத்தை, பெருமையை எடுத்துரைத்தாரேயன்றி மந்திராலோசனைச் சபையில் எடுத்து நாம் அலசி ஆராய வேண்டிய யுத்திகளை ஒருவரும் சொ[illegible]வில்லை. இப்போது நான் சொல்கின்ற இந்த இவை கேளெனச் சொல்வான்

மால்வரு தொடர்பினுல் வனத்துச் செல்லுமீன்
கோல்வரும் உணவினைக் குறித்து வவ்வியே
பால்வரு புணர்ப்பினிற் படுதல் போலநீ
மேல்வரு கின்றதை வினவல் செய்கிலாய்.

உணவின் மேல் ஆசை பெருகுகின்ற நிலையினுல் கடலில் ஓடும் மீன் தூண்டிலிலே செருகப்பட்ட உணவினைக் குறித்துச் சென்று அதனைக் கவ்வுதலும் அந்த உணவினுள் மறைந்திருந்த தூண்டிலினில் அகப்படுதல் போன்று நீயும் முன் பின் யோசனையிலாது இப்போது நீ கொண்ட மனவெப்பினை தீர்வதற்கு இந்தக் கருமத்தைச் செய்தால் என்ன நேருமென பின்னுல் வருவதைச் சிந்திக்கின்றாயில்லை.

மன்னவர் செவியழல் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவர் அமைச்சர்கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவாறு உரைக்கின் றூர்களே.

அடுத்ததாக ஓர் அரசனிடம் ஓர் மந்திரி தான் சொல்லப் போகும் வார்த்தை அரசன் காதில் நெருப்பால் சுட்டது போன்றிருந்தாலும் அரசனுக்கும் அனை

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலியூரானை சிவனை....

(2—ம் பக்கத் தொடர்ச்சி)

பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கறுத்த ஆனையின் பெரும் தோலின் போர்வை உடையானை அழகிய பூக்கள் மலிந்த திருக்கச்சி ஏகம்பத்தானை; ஆராகியும் அவனுக்கு அடியவராய் இருப்பார்க்கு மிக நெருங்கியவனைவனை தேவர் கட்குமே அறிதற்கரிய அளவுகடந்தவனை பூவுலகத்தாரும் வான் உலகத்தாரும் பணிந்திடவே திருநடனம் ஆடுகின்ற மேலான ஒளியை எண்ணற்ற பேர் உடையவனை பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே. 8

முற்றுத பால்மதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகளொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

முற்றுத பால் போல் நிலவுதரும் பிறை சூடியவனை; மூவுலகமும் தானே யான முதல்வன் தன்னை; உலகை அழித்தாரின் புரங்கள் மூன்றும் அழித்தான் தன்னை; திகழ்கின்ற ஒளியை; மரகத மணி போல் அருமையானவனை தேன் போல்பவனை பாலின் இன்சுவையானவனை திருக்குற்றாலக் கோயிலில் இருந்தருளும் தோடணிந்த காதுடையானை எம்அரசை ஞானம் பெற்றுடையவனை பெரும் பற்றப் புலியூரானை பேசாத நாள் எல்லாம் பிறவா நாள். 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

கருமேகம் ஒளிர்வது போன்ற திருவுடன் மேனி சிவந்த கண்உடையவராம் திருமாலும்; வாசமுடைய தாமரை மலரில் இருந்த கடவுள் பிரமனும் தேடிக்காணாத வண்ணம் சீருடைய ஒளிவிளங்கிடும் அக்கினிப் பிழம்பாய் நின்ற மிக மிக முந்திய தாய்த் திகழும் சோதியை எமது தடுமற்றச் சிந்தையினை மயக்கம் தீர்க்கும் அருளுடைய ஒளியை பெரிய பூமியும் வானுலகும் அப்பாலுள்ள வெளியும் அங்குள்ள ஏழு உலகமும் இவையெலாம் கடந்த அண்டத்து அப்பால் நின்ற பேரொளியைப் பெரும் பற்றப் புலியூரானை பேசாத நாள் பிறவாத நாளே. 10

திருச்சிற்றம்பலம்

## சிவனுய்யக்.....

(7—ம்பக்கத் தொடர்ச்சி)

லாத ஜன்மங்கள் கன்ம அனுபவதின் பொருட்டே கிடைப்பன. நான் எனது என்னும் அகங்காரமமகாரங்களினுணர்ச்சியுடன்மறு ஜன்மங்களில் உயிர்கள் தொழிற்படுவதில்லை. பகுத்தறியும் ஆற்றலையுடைய மனிதனேஅதை முறையாகப் ப்யன் படுத்தாத காரணத்தால் மலநீக்கத்தைத்துரிதப் படுத்தி வீடு பேறடைய எத்தனியாது மீண்டும் மீண்டும் அற்ப சுகங்களை நாடி நிலையில்லாத இழிவான பாசவாழ்க்கையிற் கூத்தாடும் பஞ்சப்புலங்களுக்கு அடிமையாகிவிடுகின்றான். நரகப்படுகுழியில் வீழ்வது மன்றி புல்லாய்ப் பூடாய் புழுவாய் மரமாய் பல்விருகமாய் பறவையாய் பாம்பாய் இவற்றினும் கீழாய பிறவிகளிற் பிறந்து துன்பத்தை அனுபவிக்கவும் வேண்டியவனுகின்றான்.

மானுடப் பிறப்பெய்தல் அரிது. உத்தம தேசத்திலே பிறத்தல் அதனினும் அரிது. உத்தம சாதியிற் பிறந்தும் புறச்சமயஞ் சாராது நிற் றல் மிக மிக அரிது

நார்பயில் தேயந்தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத்தினுகும்;
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய் சாதினில் வந்து
பரச மயங்கட்கெய்தாப் பாக்கியம் பண்ணுணுதே

—(சிவஞானசித்தியார்)

செல்வம் முதலியவற்றல் வரும் செருக்கும் வறுமையால் வரும் சிறுமையும் நீங்கி அடிமைத்திறத்தோடும் சைவசித்தாந்த நெறி நின்று வாழும் பாக்கியம் மிக மிக வரிது. அந்நெறியிலே தளம்பாது நின்று சிவனருளைப் பெற்று அவனை மனம் வாக்குக் காயங்களினுலே இடைவிடாது வணங்கி மலங்களைப் போக்கி வீடு பேற்றையடைதலே மனிதப் பிறவியின் குறிக்கோள்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காயத்து
ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்காக வன்றே
வானிடத்தவரும் மண் மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத்து உழமும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ

[—சிவஞானசித்தியார்]

(தொடர்ச்சி 6—ம் பக்கம் பார்க்க)

## மாதோர் பாகம்....

(3—ம் பக்கத் தொடர்ச்சி)

வியந்து பேசும்போது அருகிருந்த மந்திரிகள் அரசனைநோக்கி இந்த வெற்றியில் ஓர் இரகசியம் உளது என்றார். என்னே என ஆச்சரியமுடன் அரசன் கேட்கிறான்: அவர்கள் பதில் எதுவாயது தெரியுமோ! சேக்கிழார் தருகிறார்: "மதி அணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி உடைமையினுல் எதிர் இவருக்கு இவ்வுலகில் இல்லை" என்றதாக. எப்படிச் சிந்தித்துப் பாருங்கள். ஓர் நாடு அது தாழ்ந்திருப்பதை மீட்டு நன்னிலைப்படுத்தவேண்டில் அது ஓர் சிவன்பால் பத்தி உடையவராய் பெருந்தொண்டு உடையவரால் தான் முடிந்திடும். அருள்வலி உடையார்முன் எதிரி வீசிய படையும் அகலும்: நேர்வராது. அதுதான் உண்மை. இந்தவகை பல இடமும் பேசப்படல் இப்புராணத்துக் காணலாம்.

அரசனுடைய அரசாட்சியின் பெருமையை கூறுகின்றபோது "மண்ணில் வாழ்தரும் மன் உயிர்கட்கு எவ்லாம் கண்ணும் ஆவியும்போல்வரும் காவலான்" என்று சொல்லுகின்றார். எப்படி இருப்பது அரசாட்சி? சிந்தியுங்கள்; இப்படி நடந்தால் உலகமக்கள் எத்துணை நயம்பெற வாழ்வார்கள். அடுத்து அரசராக இருப்பினும் குடிகளிடத்து அளவிறந்த அன்புடையராகவே இருக்கின்றார்கள். உதாரணமாக கழறிற்றறிவார் சேரஅரசர் வீதியில் குதிரைமீது உலாவிவருகின்றார். அவ்வேளை தனது துறையில் தனது சீலைகளைத் தோய்த்து உப்புமண் மேனியில்பட்டு, மேனி முழுவதும் வெண்மையாகி ஓர் வண்ணான் அந்தவழியாக வருகின்றான். வருகின்ற அவனை சேரஅரசர்பெருமான் கண்டதும் ஓர் சிவனடியார் அவரென எண்ணிக் குதிரைநின்றும் இறங்கி முன்சென்று வணங்குகின்றார். வண்ணான் பயந்து ஐயோ யாராக என்னை எண்ணி வணங்கியது; நான் அடித்தொண்டு செய்யும் வண்ணான் என்றலுமே சேரஅரசர்பிரான் என பதில் சொல்லுகின்றார் தெரியுமோ? சேக்கிழார் தருகின்றார் பாருங்கள். "அடிச்சேரன் அடியேன்" என்றும் பின்னரும் வண்ணானை நோக்கி, நீர் எம்பிரானுடைய அற்புதமான நான்விரும்பும் திருநீற்றின் கோலத்தை நினைப்பித்தீர் பயப்படாது நீர்செல்லும் என்பதை "வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்" என்பதாக. இந்தவகை பாடி அநபாயச்சோழ அரசன்முன்பு இருந்து இதை ஓதிநிற்கிறார் சேக்கிழார்பெருமான் என்றல் அதை எவ்வாறு என்ற நலத்தை நீங்களே சிந்தியுங்கள். குடிமக்கள் அரசர்களிடத்து அளவிறந்த பக்தி உடையவராக இருந்திருக்கின்றனர். உதாரணமாக தனது உயிரினும் மேலாக அரசரை மதித்துள்ளனர். எந்த ஒரு குடிமகனே அரசகருமம் புரிபவரோ ஒருக்காலமும் அரசகட்டளையை மீறுவோராக வஞ்சனை செய்வோராக இருந்திருக்கவில்லை. அரசன்பால்கொண்ட விசுவாசத்தை கழறிற்றறிவார் சேரமான் பெருமாள் திருக்கைலாயமலை செல்லும்போது அவர்பிரிவைத் தாங்காத சேனைவீரர் தத்தமது உடைவாளால் தம்மைக் குற்றிவீழ்த்திய வரலாறு சான்றுகுதே! அரசர்கள் எப்பொழுதும் செங்கோலாட்சி தமது நாட்டில் நிகழ்த்துவதுமல்லாது; அயல் நாடுகளிலும் அத்தகைய செங்கோலாட்சி நிகழ்வுற அந்த அரசரைத் தமக்கு திறைகொடுக்கும் அரசராகக் கொண்டனர். இந்தவகை புகழ்ச் சோழஅரசர் ஆண்ட காலத்து அவரது ஆட்சிக்குட்படாது சிங்கள அரசர் ஒருவர் பெரும் கொடுகோன்மையாக தனதுநாட்டை ஆண்டபொழுதில் அந்த சிங்களநாட்டின் மலைஅங்கணைப் பொடிசெய்து அங்குவாழும் மக்களை அரசன் செவ்வனே ஆளுமாறுசெய்து வெற்றிகொண்ட வரலாறு திருத்தொண்டர் அந்தாதியிலும் இப்புராணவாயிலாகவும் பெறுகின்றோம். இன்னமும் அரசர் தமது அரசாட்சியில் தமது ஆட்சிக்குட்பட்ட சிவாலயங்கள் யாவும் சிறப்புறத் தொண்டுகொண்ட வரலாறுகள் பெரும்பாலாக நாங்கள் காணலாம்.

வணிகர்கள் என்பவர் எப்பொழுதும் உற்பத்திசெய்வார்க்கும் வாங்குவார்க்கும் தொடர்பு ஏற்படுத்தும் இடைப்பட்டவராக இருந்திருக்கின்றனர். அவர்களுடைய சீலத்தை அளப்பரிதாகச் சேக்கிழார் மொழிகிறார். தமது வாணிபத்திலும் தருமத்திற்கே முதலிடம் கொடுத்தார்கள் வணிகர் அவர்கள். மிகைப்பட்ட இலாபம்பெற்று உற்பத்திசெய்வாரையும் வாங்குவாரையும் துயர்படுத்தவில்லை என்பதும் நாயன்மாரது புராணத்துப் பேசப்படுகின்றது. தங்கள் மரபிலே ஏதேனுமாகுதல் வடு ஏற்படக்கூடாது என்பது அவர்களது குறிக்கோளாக இருந்தமையை "மானமிகு தருமத்தின் வழவந்த குடிமரபின் ஊனமில்சீர் பெருவணிகர்" என குறிப்டுவதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். நாப்பிளக்கப் பொய்சொல்லி ஒருபோதும் அவர் பொருள்தேடவில்லை. நாட்டின் நலன்கருதியே தமது வாணிபத்தை மேற்கொண்டனர். அது ஒரு தொண்டாகக் கருதினர் என்பதும்இப் பெரிய புராணத்து சொல்லப்பெறுகிறது. ஈசன் சிவன் பசுவிடத்துப்பெறும் ஐந்துபொருள்கள், சாணம் சலம் பால் தயிர் நெய் இவற்றை விரும்பித் திருமஞ்சனம் ஆடுபவர். ஆனுல் ஆசிரியர் தாம் குறிப்பிடும் அவ்வூரில் வாழும் மக்கள் கொடுத்திடும் பொருள்களாவன தருமமாக நடத்தலும் நீதியாக நடக்தலும் அன்றியும் உயர்ந்த நிலையை எல்லோரும் அடைதல்வேண்டும் என்ற சால்பு எனும் குண மும்கொண்டு அவற்றைப் புரிதல் சிவதொண்டாகவே கொண்டனர் என்பதை "ஆன் ஐந்தும் உகந்து ஆடுவார்க்கு அவ்வூர்தான் அளிப்பன தருமமும் நீதியும் சால்பும்" என்று எத்துணைச்சிறப்புற எமது முன்னையோர் பண்பை எடுத்து மொழிகின்றார்,

வேளாளர்களது சிறப்பு இப்புராணத்து மிகவும் தெளிவுபெற விளக்கப்படல் காண்க. வேளாளர்களது பெருமையில் சத்தியம் முதலிடம்பெறுவது, சொன்ன சொற்காத்தல் மிகவும் ஓர் தலையான பண்பு. விருந்தோம்பல் அடுத்ததொன்றுகும். இன்னும் தீங்கு என்பனசிந்தையில் அறியார் என மொழிகின்றபோது அதன் உயர்ச்சி எவ்வாறு அறிக. வேளாளரது உழவுத்தொழில் தாழ்வுதராதது என்றும் ஈகையின் உறுதிக்குத் துணையாவது என்பதை தாளாண்மை உழவுதொழில் தன்மை வளம் தலைசிறந்த வேளாளர்" என்றும் வேளாண்குடிகள் நீடித்த சந்ததியினராக; வாழ்ந்து வருபவர் என்றும்; அவர்வாழ்வில் எல்லாநலனும் பெற்றேவருபவர் என்பதை "அனைத்துவித நலத்தின்வழுவாத நடைமரபிற்குடி" என்று வேளாளரது நன்மை தரும் மரபுகளை சிறப்புறக் காட்டுகிறார். இவர்கள் குடிகள் ஓங்கிச்சிறந்துற்ற வரிசை உடைய மாடங்கள், வீதிகள் நயமுடன் விளங்குதலையும் ஆடல் பாடல் இன்பப்பொலிவு அழகு இவையாவும் இயல்குன்றுவகை நாட்டில் நகரத்தில்பெருகி நின்றன என்றும் இவையாவும் சிவம் பெருக்கும் திருவே உறுதியாகக்கொண்டன என்றும் மொழியப்பெறல் காணலாம்.

அடுத்து எல்லா மக்களும் நலனுற வாழவேண்டும் என்றல் சைவம்தழைத்தல் வேண்டும். நீற்றன்பு பாதுகாக்கப்படல் வேண்டும். சிலம்பணிந்த சேவடியுடைய பெருமானுர்க்கு உற்ற அன்பே பெருகவேண்டும்; அதுவே ஞானம் என்பது என்றதை "ஞானம் ஈசன்பால் அன்பு" என்று சுருக்கமாக நயமுடனுக மொழிகின்றார். சிவன்பால் அன்புடையார் எப்பொழுமே வஞ்சனை அறியார். உலகபந்தங்களில் அவதியுற்று ஓடி அலையார்கள். கண்ட பொருளில் மனம்வையார். அறநெறியில் வழுவார்கள். அன்பர்கட்கு பணிசெய்ய மறவார்கள். சிவன் திருவடிகளேயன்றி பிறிதொன்றும் அறியார்கள். இன்னும் பிறிதொரு சங்கடம் வந்தாலும் அதனுல் அயரார்கள் என்ற இதன் தன்மையே இப்புராணத்து பேசப்படக் காணலாம். உலகியல் நிலையில் பஞ்சம் போர் இவை வரினும் கண்ணுதற் கடவுளின் உண்மை அடியார்க்கு அன்பர்க்கு கவலை அடையாது என்பதை "கண்ணுதலான் அன்பர்க்கும் கவலைவருமோ" என்று எடுத்தாண்டு எம்மை எம்ஐயன் சிவன் திருவடிப்பற்றில் ஊன்றிநிற்கவழிப்படுத்தும் தன்மையானநயமுடையன இப்புராணம்

(தொடர்ச்சி 6ம்—பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் உய்யக் கொள்கின்றவாறு

''அருமையான உலகம்'' இதுஈழம் செய்த தவப் பயனுக அவதரித்த ஆத்மஞானி யோகசுவாமிகள் திருவாக்குகளில் ஒன்று. எல்லோருக்கும் உலகம் அருமையானதெனக் தோற்றப்படுதலில்லை. என்றும் எங்கும், அற்ப இன்பத்தையும் அதிக துன்பத்தையும் அனுபவிக்கின்ற மனிதர், உலகம் அருமையான தென்ற வாக்கியத்தின் தத்துவத்தை உணர்ந்து கொள்ளமாட்டார்கள். முற்றறிவும், முடிவில்லா வாற்றலும், வரம்பிலின் பமும், கருணையே வடிவமுமான கடவுளொருவர் தான் இவ்வுலகத்தைத் தோற்றுவித்தார் என்பதை ஏற்றுக்கொள்ள நம்மால்முடியுமானுல்; இவ்வுலகின் அருமை விளங்காமற் போகாது.

புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
  போக்குகின்றேம்அவமேஇப்பூமி
சிவனுய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கித்
  திருப்பெருந்துறையுறைவாய்! திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மாலவன் ஆசைப்
  படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெம்மை ஆட்கொள்ளவல்லாய்
  ஆரமுதே! பள்ளியெழுந்தருளாயே.

என்று பரம்பொருளைப் பள்ளியெழுப்பினுர் மாணிக்கவாசக சுவாமிகள். இந்தப்பூமிதான் சிவன் ஆன்மாக்களை உய்யக் கொள்ளுகின்ற வழி. இதை உணர்ந்து கொண்ட திருமாலும் பிரமனும் சுவர்க்கலோகத்தில் வெறுப்புக்கொள்ளுகிறுர்கள். பூலோகத்தில் எங்களுக்கொரு பிறவி கிடைக்காதோ என்று தவிக்கிறுர்கள். புவனியை நோக்க எல்லா இன்பங்களையுங் கொடுக்கும் சுவர்க்கம் அவர்களுக்குப் பயனற்றதாகத் தோற்றுகிறது. ஏன்? வீடு பேற்றுக்கு ஒரேயொருவழி பூமி அல்லவா?. அங்கேதான் பார்வதி சமேதராய்ப் புகுந்து இறைவன் மனிதரை ஆட்கொள்ளுகிறுன். நாங்கள் தேவலோகத்திலே பிறந்து அவமேகாலங் கழிக்கின்றேம். பூமியிற் பிறந்தோர் சிவபதமடைய, நாங்கள் இந்த அற்ப இன்பங்களுக்காகச் சுவர்க்கத்திலிருந்து வீணுகக் காலம் போக்குவதா இது எத்தனை நாளின்பம்! அடுத்து நரகத்துக்கும் போக வேண்டிவந்தாலும் வருமே! மனிதருக்குக் கிடைத்த பாக்கியமல்லவோ பாக்கியம். அவர்களை ஆட்கொள்வதற்கு அம்மையும் அப்பனும் பூலோகத்துட்புகுந்து தேடித் திரிகின்ருர்கள். இவ்வாறு புலம்புகிறுர்களாம் அயனும் மாலும். இப்போ எப்படியிருக்கிறது நம்முலகம்? அதன் அருமைப்பாட்டைப் பிரமவிஷ்ணுக்கள் சொல்லக் கேட்ட பின்னும் யோக சுவாமிகளின் வாக்கியத்தில் ஐயுறவு கொள்ளலாமா?

பூவுலகத்திற்கு இத்துணை பெருமை கொடுப்பதற்குக் காரணமில்லாமலில்லை. மானுடர் வாழும் உலகம் இதுவொன்றுதான். பூவுலகத்திற்கு மேலும கீழுமாகப் பலவுலகங்களுண்டு. அங்கங்கெல்லாம பல்வகைப்பட்ட அனந்த உயிர்கள் வாழ்கின்றன. பகுத்தறிவுடைய மனிதவர்க்கம் வாழுவது பூமியில். மேலுலகங்களில் புண்ணியப்பயனுகிய இன்பத்தை மாத்திரமும், கீழுலகங்களில் பாவப்பயனுகிய துன்பத்தை மாத்திரமும் ஒரு குறிக்கப் பட்ட கால எல்லைக்கு அனுபவிக்கலாம். பூவுலகில் பிறக்கும் மனிதருக்கு மற்றைய உயிர்வர்க்கங்களுக்கில்லாத ஒரு சுதந்திரமுண்டு. பண்டு செய்து கொண்டுவந்த நல்வினை தீவினையின் பயன்களை அனுபவிக்கும் பொழுது, புதியவினைகளைச் செய்து புண்ணிய பாவங்களை ஈட்டுவதற்குப் பூலோகத்திலுள்ள சௌகரியங்களைப் போல் வேறு எவ்வுலகிலுமில்லை யெனலாம். அரிது அரிது மானுடராதல் அரிது. தக்கது எது தகாதது எது; புண்ணியமாவது எது பாவமாவது எது என்று பகுத்தறியும் அறிவுடையவன் மனிதன் ஒருவனே. அவனை ஆட்கொள்வது சுலபம் எனக் கருதியே பஞ்சகிருத்திய கருத்தா பல பல வேடங்கொண்டு பூவுலகில் கோயில கொண்டு எழுந்தருளியிருக்கின்றுர்.

ஆணவ பந்தத்தின் வலிமையைச் சிறிது சிறிதாகக் குறைப்பதற்கு அனுகூலமாக; ஓரறிவு முதல் ஐயறிவு ஈறுகவுள்ள உயிர்வர்க்கங்களாக இருந்து அவற்றிற்கேற்ற உடல்களை இறைவனருளால் பெற்று பலகாலம் பிறந்திறந்து உழன்று போதிய அளவு மலபரிபாக மடைந்தபின் நமக்குக் கிடைத்ததே பகுத்தறிவுனைப்படும் ஆருவதறிவுடன் கூடியமானுடப் பிறவி. இவ்வகைப் பேற்றைப் பெறுதல் கண்டிடிற் கடலைக்கையால் நீந்தின காரியங்காண் என்கின்ருர் சந்தான குரவர் அருணந்தி சிவாச்சாரியர். பகுத்தறிவில்

[தொடர்ச்சி 8—ம் பக்கம் பார்க்க]

## மாதோர் பாகம். ....-

(2—ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து இங்கு மொழியப் படவில்லை. யாவும் மேன்மையாகவும்; உணர்ந்த பெரியோர்கள் உண்மையாக ஏற்றுக்கொள்ளும்படியாகவும் வரலாறுகள் தரப்பட்டுள்ளன.

பெரியபுராணத்தை நாம்உணர்ந்து தெளிந்து கொள்வதென்ருல் முதற்கண் நாம் சீலமுடைய வராக இருக்கவேண்டும். எனது எண்ணப்படி உலக பந்தங்களில் நன்கு அழுந்திவிட்டு பிறகு பெரிய புராணத்தின் நாயன்மாரது சதைகளை படிப்போமாக இருந்தால் ஒருக்கால் நமக்கு அவை அப்படி நடந்திருக்க முடியுமோ! அவை ஒருகால் கற்பனையாக இருக்காதோ! என்ற ஐயப்பாட்டின் முளைப்புக்கள் தோன்றும். எம்வாழ்க்கையில் ஓரளவாகுதல் உள்ளும் புறம்பும் சைவத்தின் சீலமுடையார்க்கு நாயன்மார்கள் எப்படி அருள் நிலைகொண்டிருப்பார் என்பது தத்தமது அந்த சீலமுடைய வாழ்வின் நிகழ்ச்சிகளைக் கொணடே அனுமானிக்கலாம். அல்லாதவர் என்ன செய்யலாம்? அவர் பெரிய புராணத்தின் பாடலை இலக்கிய இலக்கண வரம்பிற்குள் வைத்து தமக்கு கட்டுரைவரைய மேடையில் பேச உதாரணமாகக் கொள்வதற்கு ஏற்றதொன்ருக வைக்கலாமே ஒழிய இப்புராணத்தை தமக்கு திருவருள் கூட்டிடும் ஓர் வழித்துணை நூலாகக் கொள்வது சிரமம். இதனை நான் இங்கு குறிப்பிடும் தன்மையின் சுருக்கக் கருத்து பெரிய புராணப் பாடல் அருளுடையது என்பதை விளக்கிடும் பொருட்டே யாகும். அது சாதாரண பாடல் போன்றதல்ல. அது பெரியோர்களால் திருமுறை எனக்கொள்ளப் பெறுவது. ஆதலின் ஆசிரியர் சேக்கிழாரது நோக்கப்படி எம்பிரான் சிவனது அருளைப் பெற்று உலகம் எக்காலமும் உய்ந்திடும் வழியாகவேஇப்புராணம் பாடப் பெற்றிருக்கிறது.

சேக்கிழாரது காலத்தைப்பற்றி தக்கசான்றுடன் என்ஞல் இங்கிருந்துதிடமாக துணிந்து சொல்ல முடியாது. அவ்வாறே நாயன் மாரது காலங்களையும் துணிந்து சொல்ல முடியாது. கல்வெட்டுகளைக் கொண்டு சிலர்ஊகித்தறிந்து சொல்கிறுர்கள். ஆனுல் எமக்கு அவைதான் உண்மையோ எனத்துணிய முடியாது இருக்கின்றது: இந்த கால ஆராய்ச்சிகளுக்கு தெய்வகடாட்ச முடன் அறிகின்ற அறிவு பெற்றுக் கொண்டால் ஒழிய ஏனையவகையால் அவைதெளிந் தறியமாட்டாது. முற்காலங்களில் இப்புராணங்கள் ஏடாகவே எழுதப்பட்டு இருந்தன. அப்போது அவற்றைப் பலரும் வாசித்து இன்புறும் வாய்ப்பு குறைவாகவே இருந்தும்கூட: மக்கள் இப்புராணத்தை மிகு மேன்மையாகக் கொண்டனர். என்றும் மெய்ப்பொருளாம் சிவனை அறிதற்கு இப்புராணம் ஓர் உறுதுணை என்பது எமது உறுதி. அதனை; ''மெய்ப் பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்'' என்றமையே தக்க சான்ருகும்.

உண்மையில் சிவனடியார்களுடைய மேன்மை பற்றி சேக்கிழார் இல்லாதிருந்தால் நாம் உணர்ந்திருக்க முடியாது. எவர்க்குமே அது முடியாது. மனிதனுடைய உணர்வு திருவருளுடன் இணைந்து பாடல் செய்திடும்போது தான் உண்மை புலனுகும். சேக்கிழாரது புராணப்பாடல் ஒவ்வொன்றையும் நாம் உற்று நோக்கினுல் அது மனித இயல்பிற்கு அப்பாலாயத்தான் விளங்குகின்றது. இந்த சீலம்பற்றிய வரலாறு இப்பால் தருகின்றேம்.

சண்டேஸ்வர நாயனுர் புராணத்தில் அந்தணர்களது சீலம் அற்புதமாகப் பேசுகிறுர். செம்மையாயது வெண்ணீறு. அந்த வெண்ணீற்றின் சார்பினுல் தம்மையும் இன்னும் அவ்வழிச் சார்ந்தாரையும் ஒன்ருகக் கருதிடும் ஒருமைப்பாட்டினைக் கொண்டார் என்று; செம்மை வெண்ணீற்று ஒருமையினுர் என்றும்; தாம் பிராமணராகப் பிறந்தால் உயர்ந்த சாதி மற்றையவர் இழிந்த குலத்தவர் என்பதை எண்ணுது தமது வருணச்சிரம முறைப்படி வேதத்தின் எல்லைப் பொருளாய சிவனை உணரும் பூணூல் (உபநயனம்) அணியப் பெறலால் அக்கருணையின் சிறப்பால் ஏனைய உலக மக்கள் போலவே அந்தணர் குலத்தில் அவதரித்தாலும் முற்றிலும் தம்மைத் தெய்வப் பணிக்கே ஆளாக்கும் அறிவின் பயனுன கண் போன்ற நூல் அணிவதலால்; இரண்டு பிறப்பின் சார்பினுர் என்றும்; உலகில் என்றும் நெருப்பு குப்பைகளை சுட்டு எரிப்பது. நாள் தோறும் எமது இல்லத்தை கூட்டித்துப்புரவாக்கி குப்பைக்கு நெருப்புவைப்போம். அதே போன்று உலகம் பந்தம் மேற்கொண்டு போதலாலே கலியே மிகும். அவாவே மிகும். அன்றியும் காமம் குரோதம்லோபம் போன்ற அற்பச் செயலும் தேவையற்ற கருமங்கட்கெல்லாம் சரீரெனக் கோபம் கொள்ளலும்; தமது சொந்த முதன்மைக்காக ஏனையரை இகழ்தலும் இறுமாப்படைதலும் வஞ்சித்தலும் ஆன இந்த குப்பை போன்றஎண்ணங்கள் அகத்தே மிகுவது இயல்பு. அன்ருடு அவர்செய்யும் தொழிலில் இவை பெருகுவன. பெருப்பெருக தம்மிடம் வளரக் கூடிய பாவங்கள் இவற்றை எரிப்பதற்காக; ஆகவனீயம் காருகபத்தியம் தக்கிணுக்கினியம் என்னும் மூன்று அக்கினியையும் அந்தணர் வளர்ப்பார் என்பதை; மும்மைத்தழல ஓம்பிய நெறியார் என்றும்; வேதங்கள் முதலவன் சிவனுல் அருளப்பட்டன. அவை தருமத்தின் பாலாவன அவைகள் பின்பு நானகாக வகுக்கப்பட்டன: இந்த நான்கு வேதங்களையும் ஒழுக்க முறையாகவே கற்றுர்கள். கற்று அடங்கியவர்கள். அதனைப் போற்றிடும் ஒருவராகவும்: அவையாவும் இறைவனுக்குச் செய்யும் தொண்டிற்கேஉள்ளன என்று அவ்வேதம் விதித்த சீலங்களை மேற்கொண்டு பயின்றுர் என்பதாக; நான்கு வேதம் முறையாகப பயின்றுர் என்றும்; புலன்கள் ஐந்தான கண் மூக்கு செவி நாக்கு உடம்பு இவையாவும் தத்தமது தொழிற்பாட்டால் எமது சத்தியை ஓயாது விரயம் செய்வன இவ்வகை எமது சத்தியை விரயமாக்கி அழிக்கும் அவ்வழி அவை வேண்டியதையே புரிந்து ஓடி ஆடி பார்த்து கேட்டு சுவைத்து மணந்து திரிந்த போது உடலும் மெலிந்து வயதும் முதிர்நது விடும் காலததுல; ஏனைய மக்களுக்கு; உலகிற்கு நாம ஓர் பாரச் சுமையாகின்றேம். வாழை மரம் குலைபோட்டு தனக்குத் தான் அது பழுக்கும் என்று காத்திருநத தன்மை போலத்தான் ஆகும். அதனுலே இதன் தாற்பரியத்தை உணர்ந்து ஐந்து புலன்களையும் வேதம் கற்றுத் தெளிந்த போதே அதன் வழிச் செல்லாது புலன்கள் தமது வேதநெறிக்கே ஆளாகும் படி கட்டுப்பாடு செய்து அவைகள் தமது ஏவல் கேட்கும்படி செய்கின்றுர் என்பதை; தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார் என்றும்; உலகில் ஓதல் ஓதுவித்தல் யாகம் செய்தல் செய்வித்தல் ஈதல் ஏற்றல் என்னும ஆறுதொழிலும அறவாணராகும் அவர்க்கு உரியன. இவ்வகைத் தொழில் ஆறினிலும மெய்மை விளங்கிய ஒழுக்கம் மிக வேண்டும். இந்த ஒழுக்கத்தின் சிறப்பாலே தான் உலகம் இன்புறும் என்பதால் அதனை; அறு தொழிலின மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும் விளங்கும் மறையோர்; என்ற உண்மையை சொல்கின்றுர் சேக்கிழார். இதன் சீலத்தை நாம் உணர்ந்தால் அது எத்துணை உயர்வையே நமக்கு தரும் என்பதையும்: அன்று உலகம் முழுவதையும் ஆண்ட எமது தமிழினம் எவ்வளவு மேன்மையை அடையும் என்பதையும் நீங்கள் உணர்வீர்களாக.

ஆசிரியர்தமது புராணத்து தமிழ் அரசர்கள்உலகம் முழுவதையும் தமது குடைக்கீழ்வைத்து ஆண்டார்கள் என்றும்; அவ்வாறு எல்லா உலகையும் அரசாள்வது அருள்வலிகொண்டு என்றே பேசுவார். திருவருளின் கடாட்சம் உண்டேல் படைவலி நமக்கு உண்மையில் சேரும். இதற்கு ஓர் உதாரணமாக ஒன்றை எமக்கு இங்கு காட்டுகின்றுர். பரஞ்சோதியார் எனப்படும் சிறுத்தொண்டநாயனுர் முன்பு அரசனுடைய சேனுதிபதி. அவர் வடக்கே வாதாபிநகரைச்சென்று போரிடப் போகின்றுர். போரிட்டபோது மிகப் பிரமாதமான வெற்றிகொண்டார். பரஞ்சோதியார். சேனையை வழிநடத்தி வடநாட்டின் தலைநகர் வாதாபியைத் துகள்கண்டு வந்த அற்புதத்தைக் கேள்விப்பட்டதும் அரசனுல் அதை மறக்கமுடியவில்லை. மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனே சிவலோகா....:

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய ஆயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேன்எனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

உலகில் குற்றங்கள் தம்முடன் நல்ல குணமான செயல்களையும் செய்துபெருக்கி; அழகிய பெண்களைக் கண்டு காமுற்று மயங்கி; அவ்வாறான நிலைகளால் அறிவினைப் பெருக்கும் கலைகளை ஞான நூலினைக் கற்றிலேன். மிகவும் மன்னிக்க முடியாத கொடும வினைகளை செய்தேன். எல்லாப் பந்தங்களையும் நீக்க வல்ல தொருபற்றை நான் அறியமாட்டேன். பாவியேன் பல பாவங்கள் செய்தேன், இதனால் நான் என்ன தேடிக்கொண்டேன் ஆகையால் ஏதும் ஒரு வகையிலாத எனக்கு ஒரு உய்வகை அருளாய் திருவிடைமருதூர் உறையும் எம் பிரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றம் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த
நமன்த மர்நர குத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

என்னிடத்து பேணிக்கொண்ட பொருளை தரும சிந்தையுடன் இல்லாதவர்க்கு கொடுக்க மனமிலாதிருக்கின்றேன் குற்றம் பகை இவை முதலாக உள்ள தீங்கினைவிட்டிட முடியாதிருக்கின்றேன். இத்துடன் ஆசையும் கோபமும் அவையாவும் விட முடிகின்றேன் இல்லை. யான் இவைகளைப் புரிய நினைந்தாலும் புலன்கள் என்வசமல்ல அவைவிரும்பியபடி நான் நடப்பதால் என் நிலையால் உணர்ந்து நடந்திட முடியாமல் போய் நடுங்கவைத்திடும் மூப்பு வந்து அடைந்திட இயமனுடைய தூதுவர் என்னைக் கொண்டு சென்று நரகத்திடுதலை எண்ணிப் பயந்து பெரிதும் கலக்க முற்றேன்; எனக்கு உய்வகை அருள்வீராக திருவிடைமருதூர் அமர்ந்த எந்தை பெருமானே.

ஐவ கையர் ஐயரவ ராகி
ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தானல்
அவர வர்வழி ஒழுகிநான் வந்து
செய்வ கைஅறி யேன்சிவ லோகா
தீவ ணாசிவ னேஎரி யாடீ
எவ்வ கைஎனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே

கண் காது மூக்கு நாக்கு உடல் என்னும் ஐந்துவகையான புலன்களும் எம்மை ஆளும் கொள்கையுடைய தலைவராகி ஆட்சி கொண்டு அவரே ஒருகாலும் எம்மை விட்டு நீங்கார். அந்தவகையாக அவர் வேண்டுவதனால் அவர் விருப்பத்திற் கிணங்கிய வழி நானும் ஒழுகிவந்து இப்பொழுது செய்வகையறியேன் சிவலோக தீவணா சிவனே நெருப்பேந்திநின்று ஆடுபவனேஇனி நான் உய்வகை எவ்வகையோ அவ்வகை நீ அருள் புரிவாயாக திருவிடை மருதூர் இருந்தருளும்எம்பிரானே.

ஏழை மானுட இன்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று
வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம்
போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தைபி ரானே.

ஏழையான மனிதப் பிறப்பின் இன்பத்தை நோக்கி இளையபெண்கள் வலையிலே சிக்குப்பட்டிருந்து; இன்னமும் வாழைமரம் நமக்கு ஒரு கால் குலைபோட்டுப் பழுக்கும் என்றமைபோல கொடிய வினைகளினுள் அகப்பட்டு போகம் விரும்பும் அம்மக்கள் செல்லும் கதியில் சென்றேனும் அவர்கள் அனுபவிக்கும் போகம் பொருட்சிறப்பு என்பது ஏதும் ஒன்றும் இன்னும் அறியாத ஏழையான எனக்கு ஓர் உய்வகை அருளாய் திருவிடை மருதூர் அமர்ந்த பெருமானே. 9

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி
ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்
இடைம ருதுறை எந்தைபி ரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே.

அரைக்கும் சந்தனமுடன் அகில் மரமும் பிடுங்கி திரைகளால் சுமந்து உந்தி மலைநெல்லும் சுமந்து ஆர்த்து இருகரையிலும் இரந்தோடும் காவிரியாற்றின் தென்கரை மீது விளங்கி இருக்கும் திருவிடைமருதூர் கோவில் அமர்ந்த எந்தை பெருமானை பாடலால் மொழியும் நம்பியாரூரன் பாடிய ஒளி திகழும் பாமலைஇவற்றை உள்ளத்தால் உகந்து போற்ற வல்லார்கள் நரைப்பு மூப்புடன் துயரமும் இன்றி எம்பிரான் சிவனது திருவடிகள் அடைவார்கள். 10

## மாதோர் பாகம்......

( 8-ம் பக்கத் தொடர்ச்சி )

காணப்பெறும்,

இந்த உலகில் சைவத்தைக் காத்துப்பேணல் பெரும் தொண்டாகிறது என்பது ஆசிரியரது கொள்கையாகிறது. வேதங்களின் பயன் அதுதான் சைவம். அது உலகம் எங்கும் விளங்கிநிற்பது என்றதை ''வேதப்பயனும் சைவமும்போல்'' என்றும் ''உலகெங்கும் நிரம்பிய சைவம் மன்ன'' என்றும் எடுத்தாளும் பதங்கள் காண்க.

எங்கள் நாயன்மார்கள் மூவரும்பெறும் திருநடன தரிசனத்தை இந்தப் புராணத்தில் மிக அற்புதமாகப் பேசுகிறார். சுந்தரமூர்த்திசுவாமிகள் தரிசித்திடும் பொழுது ''வையகம் பொலிய மறைச்சிலம்புஆர்ப்ப மன்றுளே மால்அயன் தேட ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை'' என்றும் ''அடுத்தாற்று நன்நெறிக்கண் நின்றார்கள்வழுவி நரகடையா வண்ணம் தடுப்பானை'' என்றும், உரனுறு திருக்கூத்து உள்ளம் ஆர்தரப்பெருகி நெஞ்சில் கரவிலாதவரைக் கண்ட நிறைவுதம் கருத்தில் கொள்ள'' என்றும்; திருநாவுக்கரசுவாமிகள் திருநடம் கும்பிடும்பொழுது ''மெய்யும் படிமிசை விழுமுன்பு எழுதரும் மின்தாழ் சடையுடன் நின்றாடும் ஐயன் திருநடம் எதிர்கும்பிடும் அவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்'' என்றும் சம்பந்தசுவாமிகள் திருநடம் தரிசித்திடும்பொழுது ''உணர்வில் நேர்வரும் சிவபோகத்தை ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் வர அருளினை'' என்று திருக்கூத்தின் சிறப்பை எத்துணை அருமைபடச் சொல்கின்றார்.

இந்த வகையான முறையால் இப்பெரும் புண்ணியப் பொருளாய திருமுறையை சேக்கிழார் நமக்குத் தந்துள்ளார். இதன் பெருமை விரித்திடற்கு எனக்கு ஆற்றல் இல்லை! எவர்க்குமே முடியாத தொன்று.
இத்தகைய புராணத்தை அச்சிட்டு உதவிட பலவகையாலும் உதவிய பெருமக்கள் அனைவர்க்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

---

## விழா எடுத்தல்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்க்கும் நல்ல நிலையைப் பின்னல் தரக்கூடிய ஓர் நடுவான நீதியைச் சொல்பவன் தான் உண்மையான மந்திரியாவான். ஆனால் இங்கு உனது முன்பு பேசிய மந்திரிகள் உனது பகைவர் உனக்கு என்ன ஆகவேண்டுமென்று விரும்புவாரோ அதைநீ பெறும்படி யாகவே சொல்லியிருக்கின்றார்.

உனது பகைவர் நீ கெடுதலை விரும்புவர், ஆகவே நீ கெடுதற்கு ஏற்ற புத்தியைச் சொன்னார்கள் இம்மந்திரிகள் என்கின்றான்.

இந்த அருமந்த பாடல்களில் எத்தனையோ உண்மையான கெடுதலில்லாத எந்தவகையான காலத்திற்கும் எல்லா வகை மனித குலத்திற்கும் பொருந்தும் படியான ஆழ்ந்த கருத்துடைய அறவுரைகள் உண்டு. அவற்றினை இவையால் என்ன பிரயோசனமாவது என்ற மனப்பாங்கைவிடுத்து அவற்றை மெய்ப்பொருள் காணும் அவாவுடன் அதனைத் தெளிந்து உணர்ந்து ஓர் இனத்தின் உயர்வில் சமுதாய அமைப்பில் நன்னெறி கொண்டிடத் திட்டமிடப் பேசும்போது இவற்றை மனதில்கொண்டு செயல்படுவோமாக இருந்தால் நிச்சயமாக நாம் எடுத்த எந்தவொரு செயலும் கருமமும் கைகூடும்.

---

## சிவனுய்யக்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயையோ இந்தப் பூமியிலே அருமையாய் நமக்குக்கிடைத்த மனிதப் பிறவியே வாலிதாம் இன்பமா மென்றெண்ணி இறைவனை வழிபட்டு உய்தி பெறும் வழியை நாடாது மூகராய் நிலையில்லா அற்சுபகங்களுக்கு உழன்று திரிகின்றார்களே மனிதர் என்று வருந்துகிறார் அருணந்தி சிவாச்சாரியார்.

இச்சரீரம் எவ்வளவு காலம் நிற்குமென அறியமுடியாது அதுவுள்ள பொழுதே அதை நலல் வழியில் பாவித்து உய்திபெற முயலுதல் அறிவுடைமை யாகும்

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகளெல்லாம்
பெறுதற்கரிய பேறிழந்தாரே — திருமூலர்

அநித்தியமான உடலை நம்பி அநித்தியமான உலக போக போக்கியங்களைத் தேடித்திரிந்து அலுத்துச் சலித்து மீண்டும் பிறப்பதற்கே தொழிலாகி இறந்து படாவண்ணம் இறைவனை வழிபட்டு அழியாத அருட்செல்வத்தை ஈட்டுதலே மனித வாழ்க்கையின் குறிக்கோள்.

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க்கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனி வேலித் திருக்கொண்டீச்சரத்துளானே –(அப்பர்தேவாரம்)

மனித வாழ்க்கையின் குறிக்கோளாவது அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்களையும் பெறுதல் என்பது அறிஞர் துணிபு இவற்றைப் பெறுதற்கு வேண்டப்படும் சகல சௌகரியங்களையும் இறைவன் பூவுலகில் குறைவின்றி வைத்திருக்கின்றான். மண்ணில் நல்கலதிக்கு யாதுமோர் குறைவிலை என்பது ஞானசம்பந்தப் பிள்ளையின் திருவாக்கு. நாமோ தலையால் நடந்து குறிக்கோளிலாது கெடுகின்றோம். அருமையான உலகத்தில் அரிதாய்க்கிடைக்கும் மானுடப்பிறவியைப் பெற்றும் பெறுதற்குரிய பேற்றை இழத்தல் தகுமோ?

என்னாலறியாப் பதந்தந்தாய் யானது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை உடையாய் அடிமைக்கு இனி ஆரென்பேன்
பன்னாட் பணிந்தேத்தும் பழைய அடியாரொடு கூடாது
என் நாயகமே பிற்பட்டு இங்கு இருந்தேன் நோய்க்கு விருந்தாயே

வந்தவரவை மறந்து மாதர்பொன் பூமி மயக்கத்தில் ஆழும் மாந்தரின் குறையை மிகநாகரீகமாகத் தன் மேலேற்றிக் கொண்டு மணிவாசகர் பாடிய திருவாசகம் இது.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு.வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org